# සී/ස හලාවත වැවිලි සමාගම
# சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம்
# Chilaw Plantations Limited








# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report 2013

පොල් සංවර්ධන හා ජනතා වතු සංවර්ධන අමාත්‍යාංශය

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு

Ministry of Coconut Development & Janatha Estate Development

# எங்கள் துாரநோக்கு

**இலங்கையில் பயிர்ச்செய்கையை அடிப்படையாகக்கொண்ட தென்னை விஞ்ஞானபாங்கிலும் இலாபகரமாகவும் முகாமைத்துவம் செய்யப்படல்.**

# எங்கள் பணிகூற்று

இலங்கையை, ”ஆசியாவின் அதிசயமாக’ அடையச்செய்வதற்கான எங்கள் பயணத்தின் பங்குதாரர்களாவதற்கு, ஊழியர்கள், பொதுமக்கள், உள்ளடக்குகின்ற எல்லா பங்குடைமையாளர்களையும் பயனடையச் செய்வதற்கு உயர் தகுதியுள்ள, அதிகாரமளிக்கப்பட்டுள்ள, ஊக்குவிக்கப்பட்டுள்ள மற்றும் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியினரால் தென்னை பயிர்ச்செய்கைச் சொத்துக்கள் மற்றும் வளங்களின் விஞ்ஞான மற்றும் வர்த்தக அபிவிருத்தியினூடாக பெறத்தகு உயர் இலாபம் மற்றும் சாத்தியமான விளைச்சலை அடைதல்

# கம்பனி தகவல்

| | |
|---|---|
| **கம்பனியின் பெயர்** | வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் (CPL) |
| **தலைமை அலுவலகம்** | 'கப்ருக்க செவன', இல. 165, புத்தளம் வீதி, சிலாபம் 61000. |
| **கொழும்பு நகர அலுவலகம்** | தரைத்தளம், 'CDA கட்டடம்', இல. 1, டியுக் வீதி, கொழும்பு. |
| **கூட்டிணைத்தல் திகதி** | 11 யூன், 1992 |
| **கம்பனியின் பதிவு இல.**<br>**சட்ட நிலை** | PB 703 (புதிய இல/2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க புதிய கம்பனிகள் சட்டம்)<br>1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க பகிரங்க கம்பனிகளுக்குள் அரச உடைமை வியாபார பொறுப்பேற்றல் சட்டம் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனங்களின் மாற்றத்திற்கமைய 18 யூன், 1992 ஆந் திகதி 719/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்த மானியினால் 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டுள்ள அரசாங்க உடைமையாக்கப்பட்ட கம்பனி. புத்தளம் மாவட்டத்தினுள் JEDB (IV) இனால் உடைமையாக்கப்பட்டுள்ள எல்லா தோட்டங்களையும் உள்ளடக்குகின்ற எல்லா பயிர்ச்செய்கை சொத்துக்கள், அதி விசேட வர்த்தமானிக்கமைய CPL இற்கு அளிக்கப்பட்டுள்ளதுடன் குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கைக்கமைய 53ஆண்டுகளுக்காக JEDB மற்றும் CPL இற்கிடையில் குத்தகை ஒப்பந்தங்கள் பின்னர் கைசாத்திடப்பட்டது. |
| **பங்குடைமைகள் வைத்திருத்தல்** ஒதுக்கப்பட்டிருக்கின்றன. | முழு பங்குகள் (100%) மற்றும் முக்கிய பங்காளர் அந்தஸ்து, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கு திறைசேரி செயலாளரிற்கே |
| **பங்கு மூலதனம்** | விசேட உரிமைகளுடன் திறைசேரியினால் வைக்கப்பட்டுள்ள முக்கிய பங்கு உள்ளடக்குகின்ற பத்து ரூபா (10 ரூபா) பங்குகள் 20,000,001. |
| **தற்போதைய பணிப்பாளர்கள் சபை** | கலாநிதி பண்டுக்க ஜயசிங்க - தவிசாளர் மற்றும் பி.நி.அ. - உறுப்பினர்<br>திரு. ஏ.எம். சந்திரபால - நிறைவேற்று அலுவலர் - உறுப்பினர்<br>திரு. கீர்த்தி பத்திரனகே - செயற்பாட்டு தவிசாளர் - உறுப்பினர்<br>திருமதி பிரியங்கனி லியனகே - உறுப்பினர் (திறைசேரி பிரதிநிதி)<br>திரு. எஸ்.சந்திரா.எஸ்.பெர்ணான்டோ - உறுப்பினர் (முன்னாள்.பொ.மா.அ.)<br>திரு. கே. பீ. ரத்னாயக்க - உறுப்பினர்<br>திரு.ஆர்.ஆர்.எம் அமரதுங்க - உறுப்பினர்<br>திரு.ஐ.எம்.ஆர். விதானகமகே - உறுப்பினர |
| **2013ஆம் ஆண்டு ஜனவரி முதல டிசம்பர் காலப்பகுதி வரையிலான பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்கள்** | கலாநிதி கே. சுனில் ஜயசேக்கர - தவிசாளர் மற்றும் பி.நி.அ. - உறுப்பினர்<br>திரு. ஏ.எம். சந்திரபால - நிறைவேற்று அலுவலர் - உறுப்பினர்<br>திரு. கே.ஏ. சாந்த ஆர். டயஸ் - செயற்பாட்டு அலுவலர் - உறுப்பினர்<br>திருமதி பிரியங்கனி லியனகே - உறுப்பினர் (திறைசேரி பிரதிநிதி)<br>திரு. எஸ்.சந்திரா.எஸ்.பெர்ணான்டோ - உறுப்பினர் ((முன்னாள்.பொ.மா.அ.)<br>திரு. டி.ஏ.டி. ருவான் தனன்சூரிய - உறுப்பினர்<br>திரு. எம்.எஸ்.எம். சக்குல்லா - உறுப்பினர்<br>திரு.ஐ. மகேஷ் ஆர். வித்தனகமகே - உறுப்பினர் |
| **வெளிக் கணக்காள்வாளர்கள்** | திருவாளர்கள் ஐயர் அன்ட் கோ<br>(திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் நாயகத் தினால் நியமிக்கப்பட்டது)<br>பட்டயக் கணக்காளர்கள், ஹேவ்லொக் மத்திய கட்டடம<br>இல 104-4/1 ஹேவ்லொக் வீதி, கொழும்பு 5. |
| **வங்கியாளர்கள்** | இலங்கை வங்கி மக்கள் வங்கி |
| **செயலாளர்கள்** | கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விஸஸ் (பீவீரீ) லிமிட்.<br>இல. 47, அலெக்ஸாண்ரா இடம், கொழும்பு 7 |

# நிதிச் சுருக்கம்

(31 டிசம்பர் 2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கானது)

## சுருக்கப் பெறுபேறுகள்

| | 2013 ரூபா '000 | 2012 ரூபா '000 | பேதங்கள் % |
|---|---|---|---|
| தென்னை உற்பத்தி (தேங்காய்) | 9,595,315 | 15,807,770 | (39%) |
| நிகர விற்பனை சராசரி (தேங்காய் எண்ணிக்கை படி ரூபா.) | 29.92 | 21.26 | 41% |
| வருமானம் | 287,152 | 339,051 | (15%) |
| மொத்த இலாபம் | 112,890 | 123,733 | (9%) |
| வரி, வட்டிக்கு முன் இலாபம் | 108,989 | 111,209 | (3%) |
| வரிக்கு முன் இலாபம் | 81,820 | 86,225 | (6%) |
| வரிக்கு பின் இலாபம் | 72,919 | 77,975 | (6%) |
| நிறுத்தி வைத்த இலாபம் | 625,542 | 587,623 | 6 |
| செலுத்தப்பட்ட பங்கிலாபம் | 35,000 | 75,000 | (53%) |
| மொத்த பங்கிலாபங்கள் (1992 முதல் 2012 வரை) | 376,650 | 341,650 | 10% |

## நிதி நிலமை

| | 2013 ரூபா '000 | 2012 ரூபா '000 | பேதங்கள் % |
|---|---|---|---|
| நடை முறை அல்லாத சொத்து | 737,497 | 602,610 | 22% |
| முதிர்ந்த / முதிர்வுறாத பயிர்ச்செய்கைகள் | 502,826 | 410,033 | 23% |
| நடை முறை சொத்துக்கள் | 356,230 | 454,231 | (21%) |
| இறுப்புக்கள் | 71,398 | 82,606 | (13%) |
| மொத்த சொத்துக்கள் | 1,093,728 | 1,056,841 | 3% |
| நடைமுறை பொறுப்பு | 45,452 | 60,149 | (24%) |
| நீண்டகால பொறுப்பு | 222,734 | 209,070 | 7% |
| கூறப்பட்ட மூலதனம் | 200,000 | 200,000 | 0 |
| பங்காளர்களின் நிதிகள் | 825,542 | 787,623 | 5% |

## நிதிசார் குறிகாட்டிகள்

| | 2013 | 2012 | பேதங்கள் % |
|---|---|---|---|
| நடைமுறை வீதம் (தடவைகள்) | 7.83 | 7.55 | 4% |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 6.26 | 6.18 | 1% |
| தேறிய இலாப வீதம் % | 39.31 | 36.49 | 3% |
| பங்கிற்கான வருவாய் | 3.69 | 3.90 | (6%) |
| சராசரி உரிமையாண்மை மீதான வருமானம் (ROE) - % | 8.8 | 9.92 | (1%) |
| ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள மூலதனம் மீதான வருமானம் (ROCE) - % | 10.31 | 11.16 | |
| நடைமுறை பொறுப்புக்களுக்கான மொத்த சொத்துக்கள் | 0.04 | 0.06 | (33%) |
| வட்டி உள்ளடங்கள் (தடவைகள்) | 3.98 | 4.45 | (10%) |

# தலைவர் – பிரதான நிறைவேற்று அலுவலரின் கருத்துரை

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால், 2013 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையுடன் கணக்காய்வு தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கம்பனியில் 88 பெருந்தோட்டப் பிரிவுகள் இருந்த போதிலும், அதில் சுமார் 15 தோட்டப் பிரிவுகள் உலர் வலயத்தில் பரந்துபட்டுக் காணப்படுகின்றன. ஏனைய தோட்டப் பிரிவுகளில் அரைவாசி உலர் வலயங்களிலும், இடைப்பட்ட வலையங்களுக்கு மத்தியிலும் அமைந்துள்ளன. இதனைச் சுற்றியுள்ள வலயங்களின் காலநிலை சுமார் பத்தாண்டு காலத்தில் நிலவிய காலநிலை மாற்றங்களின் தாக்கத்துக்குட்பட்டதன் காரணமாக பிரதான பயிராக தென்னையை மாத்திரம் பயிரிடுகின்ற எம்மைப் போன்ற கம்பனியொன்று அதன் மூலம் பல எதிர்பாராத பாதிப்புகளை சந்திக்க நேரிடுகின்றது. 2010 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த மற்றும் மாதாந்த மழைவீழ்ச்சி சீராக கிடைக்காமையின் காரணமாக, எமது கம்பனியின் அனைத்து தோட்டங்களினதும் உற்பத்திவளங்கொண்ட தென்னை மரங்களின் எண்ணிக்கை 360,721 இலிருந்து 302,253 வரை தேய்வடைந்து செல்கின்ற சூழ்நிலை காணப்படுகின்றன. 2012 ஆண்டினுள் நிலவிய வரட்சியினால் அனைத்து தோட்டங்களிலும் விளைச்சலுடையதும், இளந்தென்னங் கன்றுகளுமாக மொத்தம் 38,140 அழிவடைந்துள்ளன. அவ்வாறு பெருந்தொகையான விளைச்சல் கொண்ட மரங்கள் அழிவடைந்தமை காரணமாக கம்பனியின் மொத்த தென்னை அடர்த்தி குறைவடைந்ததுடன், தொடர்ச்சியாக அதிக விளைச்சல் தரக்கூடிய மரங்களை இவ்வாறான பாதிப்பின் காரணமாக நாம் இழந்துள்ளோம். அது மட்டுமன்றி, குறைந்த இயலளவுடைய உறுஞ்சு திறன்கொண்ட மறுதாக்கங்களின் மூலம் இளைய தென்னங்கன்றுகளின் வீழ்ச்சி பாரியளவில் தோட்டங்களில் அக்கால எல்லையினுள் காணக்கூடியதாக இருந்ததுடன், அதனூடாக தொடர்ச்சியான தென்னை விளைச்சல் மற்றும் பிரதான வருமானம் என்பவற்றில் வீழ்ச்சி நிலை காணப்பட்டன. இதன் விளைவாக 2010 ஆண்டினுள் பெற்றுக்கொண்ட தேங்காய்கள் 18,26 26 மில்லியன் ஆக இருந்ததுடன்இ 2013 ஆண்டு இறுதியில் பெற்றுக்கொண்ட தேங்காய்களின் எண்ணிக்கை 960 மில்லியன் ஆகும். இவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்கள் எவ்வாறாயினும் எமது வினைத்திறன் மற்றும் விஞ்ஞான ரீதியாக விவசாய முறைமைகளைச் செயலுருப்படுத்துவதன் காரணமாகவும், தோட்ட அலுவலர்களின் அர்ப்பணிப்புடனான சேவையினூடாகவும் சுற்றாடலுக்குத் தீங்கு பயக்கும் செயற்பாடுகளை தவிர்த்து, கம்பனியின் எதிர்கால அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பின்நிற்கப் போவதில்லை. பெருந்தோட்டங்களில் நீரைப் பாதுகாப்பது தொடர்பாக சிறு குளங்கள் மற்றும் வெறும்வெளி அகழ்வு மற்றும் வெறும் வெளிகளை அமைப்பதனூடாக நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தல், தென்னை மரங்கள் உள்ளடங்கலாக மேற்பரப்பு நீர் ஆவியாதலை மட்டுப்படுத்தல், தென்னங் காணிகளில் தேங்காய் உரிமட்டைகளை ஜம்போ வடிகானிட்டு புதைப்பதன் மூலம் உதிரி மண் படிமங்களின் நீர் மட்டத்தை ஒரேயளவில் பேணல், இணைவொட்டு புதர்களைக் களையும் வேலைத் திட்டங்களின் மூலம் நீரைப் பேணல் மற்றும் மறைமுக தென்னை உரம் சம்பந்தமான சிபார்சினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சம அளவில் மரங்களுக்கு உரமிடல், உரமிடும் போது வீண்விரயம் செய்யாதிருத்தல் ஆகிய வெற்றிகரமான விவசாய முறைமைகளை நாம் முன்னெடுத்துள்ளோம்.

மேலும் பெருந்தோட்ட எல்லையின் வேலிகளை உரியவாறு பராமரிப்பதனூடாகவும், அவ் வேலிகள் தோட்ட அலுவலர்களின் சிறந்த மேற்பார்வையின் மூலம், வெளித் திருடர்களின் தொல்லைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் தோட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற நாசகார வேலைகள் முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக குடியேற்றங்களை அண்டிய பிரதேசங்களில் நிகழும் திருட்டுக்கள் தொடர்பாக விசேட அவதானஞ் செலுத்தப்பட்டுள்ளதுடன், கம்பனியின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரினதும் அர்ப்பணிப்புடனானதும், வினைத்திறன் வாய்ந்ததுமான செயற்பாடுகளின் மூலம் அன்றாடம் விழுகின்ற தேங்காய்களை சேகரிப்பது, தோட்ட முகாமைத்துவத்தை மேற்பார்வை செய்தல் ஆகிய நடவடிக்கைகள் வாயிலாக ஆண்டிறுதியில் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

## உற்பத்திசார் பல்வகைப்படுத்தல்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி நீண்டகாலமாக தேங்காய் விற்பனை மற்றும் தரம் வாய்ந்த கொப்பரா உற்பத்திகளின் மூலம் சந்தையில் இடம் பிடித்துள்ளதுடன் அதற்காக 2013 ஆண்டில் புதிய புதிய விற்பனைப் பொருட்களின் பல்வகைமை மாதிரிகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி தனது சம்பிரதாயபூர்வ உற்பத்திகளுக்கு புதுவடிவம் கொடுக்க முனைந்தது. கம்பனியின் கொப்பரா உற்பத்தி பாரியளவில் மேற்கொள்ளப்பட்ட பளுகஸ்வெவ தோட்டத்தில் அன்றாடம் 1,500 லீட்டர் தேங்காய் எண்ணெய் தயாரிக்கக்கூடிய தேங்காய் எண்ணெய் ஆலையொன்று ஆண்டிறுதியினுள் தாபிக்கப்பட்டதுடன், அதன் மூலம் உயர் தரத்திலான சுத்தமான தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விடப்பட்டுள்ளதுடன் தேங்காய் தொடர்பாக அதிகமான பெறுமதியைப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு இலங்கைவாழ் நுகர்வோருக்கு சுத்தமான தேய்காய் எண்ணெய்யை வழங்கும் சமூக நேயமுடைய வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுத்துள்ளமை பற்றி பெருமிதத்துடன் கூறிக் கொள்ள விளைகின்றேன்.

அவ்வாறே சம்பிரதாயபூர்வ மரமுந்திரிகை தோல் விற்பனை செயற்பாட்டுக்கு புதியதோர் தோற்றப்பாட்டை உருவாக்கி மரமுந்திரிகை தோல் விற்பனையை மட்டுப்படுத்தி மரமுந்திரிகை தயாரிப்பு நிலையமொன்று புத்தளம் தம்பபண்ணி தோட்டத்தினுள் ஆண்டு இறுதியில் தாபிக்கப்பட்டது. அதன் மூலம் மரமுந்திரிகை தொடர்பான பெறுமானத்தை அதிகரிப்பதற்கு பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டதுடன், இவ்விரு முடிவுப் பொருட்களின் விற்பனை தொடர்பாக சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் முன்றலில் விற்பனைக்கூடம் ஒன்று தாபிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக பளுகஸ்வெவயில் சுத்தமான தயிர் மற்றும் யோகட் விற்பனை ஊடாக, தென்னையுடன் இடைப்பயிர்களின் பரம்பல் மூலம் மேலதிக வருமானத்தை பிரதான வருமானத்துடன் சேர்த்து உற்பத்திப் பல்வகைப்படுத்தல் ஊடாக நிதி பல்வகைப்படுத்தலிலும் எமது கம்பனி ஒத்துழைப்பு நல்குகின்றது.

## இலாபம் – நிதிச் செயலாற்றுகை

விவசாய மற்றும் விவசாயம் அல்லாத தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக மற்றும் புதிய முதலீட்டுச் செயற்திட்டங்கள் தொடர்பாக நிதி செலுத்தப்பட்டதன் பிற்பாடு 2013 ஆண்டின் இறுதியில் வரிக்குப் பின் இலாபம் ரூபா 72.9 மில்லியன் ஆகும். அது 2012 ஆண்டினுள் ரூபா 77.9 மில்லியன் ஆக இருந்தது. நீண்டகாலமாக நிலவிய வரட்சி காரணமாக தேங்காய் விளைச்சல் வீழ்ச்சியடைந்தமை காரணமாக 2012 ஆண்டினுள் ரூபா 339 மில்லியன் ஆக இருந்த வருடாந்த விற்பனை மொத்தப் பணம் 2013 இல் ரூபா 287 மில்லியன் ஆக குறைந்தததுடன், 2012 இல் ரூபா 215 மில்லியன் ஆன விற்பனைக் கிரயம் 2013 இன் இறுதியில் ரூபா 174 மில்லியன் ஆக குறைந்து காணப்பட்டது. இந்த முரண்பாடுகளுக்கு 2013 ஆண்டினுள் குறைந்த விளைச்சல் மற்றும் சீரற்ற காலநிலை என்பவற்றினால் தேங்காய் உரமிடுவதில் தாக்கம் செலுத்தியமையினால் உரம் தொடர்பாக செலவிட வேண்டிய ஆண்டிற்கான கிரயத்தில் அரைவாசி நிதி எஞ்சியதுடன், உரியவாறு நீண்டகாலமாக நாற்றுக்களின் அடர்த்தி பேணப்படாதிருந்த அனைத்து அடிமண் பயிர்செய்கைகளிலும் குறைந்துள்ள கன்றுகளை மீள நடுதல் மற்றும் முன்னர் பயிரிடப்படாத 400 ஏக்கர் அண்ணளவான நிலப்பரப்பை பயிர்செய்கைக்கு உகந்தவாறு செப்பனிடல் ஆகிய பணிகள் தொடர்பாக அதிக நிதி முதலீடு முன்னைய ஆண்டுகளை விட நிறுவனத்தின் தொடர்ச்சியான அபிவிருத்தி தொடர்பாக செலவிடப்பட்டது. இதன் போது மதிப்பிட வேண்டிய முகாமைத்துவ உபாயமார்க்கமான முதலீடுகளின் அதிகரித்த பலாபலன்கள் சார்ந்த அதிக பயன்பாடுகளுடன் கூடிய முடிவான விவசாய செயன்முறைகள் தொடர்பாக பிரதானமாக அவதானஞ் செலுத்தப்பட்டது. மேலே

# தலைவர் – பிரதான நிறைவேற்று அலுவலரின் கருத்துரை

குறிப்பிடப்பட்ட ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பிறகும் ரூபா 128.9 மில்லியன் திறைசேரி உண்டியல்கள் மற்றும் குறுகிய கால வைப்புக்கள் மூலம் உயிர்ப்புள்ள / செயற்திறன்மிகு நிதி முகாமைத்துவமொன்றை வெளிக்கொணர்ந்து தென்னைக்குரிய பிரதான முயற்சிகளுக்கு நேரொத்ததாக, வள அபிவிருத்தி செயற்திட்டங்களின் அடிப்படையில் முதலீடுகளில் மேல்மட்ட பெறுபேறுகளை செயலுருப்படுத்துவதற்கு இடையே தந்திரோபாய நிறுவகக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விவசாய மற்றும் பெறுமானம்சேர் செயற்திட்டங்களில் முதலீடு செய்வதற்கு எமது கம்பனியினால் முடிந்துள்ளது. மேலும், அரசாங்க கம்பனியான சிலாபம் பெருந்தோட்ட கம்பனியினால், 2012 ஆண்டிற்கான பங்கிலாபமாக 2013 ஆண்டினுள் ரூபா 35 மில்லியன் பணிப்பாளர் சபையினதும் தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினதும் அங்கீகாரத்தின் கீழ் பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டது.

## அடைவு மற்றும் பங்களிப்பு

சிலாபம் பெருந்தோட்ட கம்பனி 2013 ஆண்டில் முதல்முதலில் தேசிய விவசாய தொழில் மாநாட்டின் போது பாரியளவிலான பெருந்தோட்ட கம்பனிகளுக்கிடையே உலோக பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டமை பற்றி பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன் அது கம்பனியின் முழு மொத்த ஆளணியினர் மற்றும் அலுவலர்கள் அனைவரினதும் சிறந்த அர்ப்பணிப்புக்குக் கிடைத்த பெரு வெற்றியாகும்.

கம்பனியினால் நீண்டகால பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் எதிர்பார்ப்புடன் உயர் தரத்திலான தென்னை உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக பளுகஸ்வெவ தோட்டத்தினுள் கிளை சேர்க்கை செயற்திட்டம் ஒன்று 2011 ஆண்டிலிருந்து இதுவரை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் கன்னித்தென்னங் கன்றுகள் 2013 ஆண்டினுள் விநியோகிக்கப்பட்டன. அவ்வாறே, பிங்கிரிய கினியம தோட்டங்களில் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்துடன் ஒன்றிணைந்து 100 ஏக்கர் பரப்பினைக் கொண்ட தென்னை கீழ்ப்படை மண் பயிர்ச்செய்கை புதிதாக அரம்பிக்கப்பட்டதுடன் அதன் மூலம் தொடர்சியாக ஐந்து ஆண்டிகளினுள் கப்ருவன போன்ற உயர் தரத்தினைக் கொண்டு மேம்படுத்தப்பட்ட தென்னை விதை நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உற்பத்தி செய்யப்படவுள்ளது.

அவ்வாறே 2013 ஆண்டின் நடுப்பகுதியில் சந்தையில் அதிகமான தென்னை சமவிலை தொடர்பாக அமைச்சின் வழிகாட்டல் கீழ் கொழும்பு மற்றும் சிலாபம் வார சந்தைகளில் நகர சபையின் அனுசரனையுடன் குறைந்த விலையிலான தென்னை விற்பனையின் ஊடாக நாம் வருமானமீட்டும் அரசாங்க கம்பனியொன்றாக நாட்டின் நுகர்வோரின் தேவைப்பாடுகளை தேசிய கடப்பாடாக கருதி எமது பங்களிப்பை சிறந்த முறையில் நல்குகின்றோம்.

## அமைச்சின் பங்களிப்பு

தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் ஜகத் புஷ்பகுமார அவர்களின் சிறந்த வழிகாட்டலுடனும் செயலாளரினதும் ஏனைய அனைத்து அலுவலர்களினதும் சிறப்பான கண்காணிப்புடனும் சிலாபம் பெருந்தோட்ட கம்பனி 2013 ஆண்டின் இறுதியில் பல்வேறு முதலீடுகள் தொடர்பாகவும் புதிய பயிர்செய்கைகள் தொடர்பாகவும் ஈடுபட்டுள்ளதுடன், அதன் பெறுபேறுகளை எதிர்காலத்தில் எமக்கு நுகரக்கூடியதாகவிருக்கும் என்பது திண்ணம். தென்னங் கன்றுகளின் துரித பரம்பல், புதிய பயிர்செய்கைகளை ஆரம்பித்தல், தென்னை நாற்று மேடைகளை அதிகரித்தல் மற்றும் விற்பனையை விரிவுபடுத்தல் ஆகியன தொடர்பாக கௌரவ அமைச்சர் புஷ்பகுமார அவர்களினால் வழங்கப்பட்ட கொள்கைரீதியான ஒத்துழைப்புக்கள் நினைவுகூரத்தக்கனவாகும்.

## முகாமைத்துவம் மற்றும் மனிதவளங்கள்

சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் பெறுமதிமிகு சொத்தாக மனிதவளம் இனங்காணப்பட்டு, அதனை ஊக்கமூட்டுவதன் ஊடாக இங்கு தோட்டங்களின் ஆளணியினர் முக்கியத்துவம் பெறுகின்றனர். பெருந்தோட்ட வளங்களின் பெறுமதியை ஒன்றுதிரட்டி உற்பத்தி அதிகரித்தல், வினைத்திறன், வருமானம் மற்றும் இலாபம் என்பனவற்றை தனதாக்கிக் கொண்டு கம்பனியின் பங்குதாரர்கள் மற்றும் நலன்விரும்பிகளுக்கு பல நன்மைகள் கிட்டுகின்றன. தென்னை ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஏனைய அமைப்புக்களினால் வழங்கப்படும் பயிற்சிகளின் மூலம் குறித்த மனித மேம்பாடு நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை, செயலாற்றுகை மதிப்பீட்டுச் செயன்முறைக்கு இணையொத்ததாக ஆளணியினரின் சேவைகள, பங்களிப்பு அங்கீகாரம் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வேலைத்திட்டங்கள் என்பன தொடர்ச்சியாக முகாமைத்துவத்தினால் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன.

## நன்றியுரை

மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனி பெற்றுக்கொண்ட நிதி மற்றும் பௌதீக மேம்பாடு ஆகியன தொடர்பாக பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அதற்காக நேர்மையாக சேவையாற்றிய அனைத்து தோட்ட அதிகாரிகளுக்கும், உதவி தோட்ட அதிகாரிகளுக்கும். அலுவலகத்தின் அனைத்து உத்தியோத்தர்களுக்கும், தத்தமது வலுவினை சிறந்த அர்ப்பணிப்புடன் நிறுவனத்துக்காக வழங்கிய அனைத்து தோட்ட ஊழியர்களுக்கும், சிலாபம் பெருந்தோட்ட கம்பனியை அரச கம்பனியொன்றாக மீண்டும் புணரமைப்பதற்கு கொள்கைசார் தீர்மானத்தை மேற்கொண்ட, இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசுசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும், ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை உரிய வழிகாட்டல்களை வழங்கிய அமைச்சின் கப்ருக நவோதாவ தொடர்பாக சிலாபம் பெருந்தோட்ட கம்பனிசார்ந்த தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் ஜகத் புஷ்பகுமார அவர்களுக்கும், எப்பொழுதும் எம்முடன் இணைந்து செயற்படுகின்ற அமைச்சின் செயலாளர் உட்பட அலுவலர்களுக்கும், இறுதியாக கம்பனியின் தந்திரோபாய நிறுவக கட்டமைப்புக்கமைய எமது அனைத்து முயற்சிகளினதும் அடைவுகளை மீளாய்வாண்டினுள் எய்துவதற்கு எமது கம்பனியின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலராக நான் வழிகாட்டுவதற்கும், அர்ப்பணிப்புடனும் ஊக்கத்துடன் செயலாற்றுவதற்கும் ஒத்துழைப்பு வழங்கிய பணிப்பாளர் சபையின் அனைவருக்கும் எனது இதயபூர்வமான நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



(பண்டுக ஜயசிங்க)

தலைவர் / பிரதான நிறைவேற்று அலுவலர்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

# குறிப்பிடத்தக்கவைகள் – 2013

## பின்னணி

முழுமையாக அரசிற்குச் சொந்தமாகவுள்ள சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியினது (CPL) பிரதான பணி நாட்டினது பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றி நாட்டின் பொருருளாதாரத்தை உறுதிப்படுத்துவதாகும்.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சின் நோக்கு மற்றும் வழிகாட்டலின் கீழ் அதன் தேசிய தெங்குத்துறை அபிவிருத்தி திட்டமானது, 2011-2016 வரை பொருளாதாரத்தின் பல்வேறு கோணங்களையும் நோக்கிய இலக்குகளை வகுத்துள்ளது. இதன்படி நிலைத்திருக்கும் விதத்தில் 3650 மில்லியன் தேங்காய்களையும் 2016 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளூர் சமையல் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளக்கூடியதாகவும் கைத்தொழில் உற்பத்திகளுக்குரிய உள்ளீட்டுத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ளக்கூடியதாகவிருக்கும்.

## இலக்குகளும் பணிகளும்

நாட்டிலே தெங்குப் பயிர்ச்செய்கையை மற்றும் கைத்தொழிலுக்குப் புத்துயிர் வழங்குவதற்காக விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரவை உறுப்பினர் என்ற வகையில் கௌரவ ஏ.பீ. ஜகத் புஷ்பகுமார அவர்கள் மிகவும் நன்மையில் நம்பிக்கை கொண்டவராகவும் அதேவேளை தேசிய தெங்குத்துறை அபிவிருத்தித் திட்டத்திலுள்ள (கப்றுக்க நவோதய) எட்டு இலக்குகளுக்கும் 2011 ஆம் ஆண்டு முதல் கண்டுணரக்கூடிய பெறுபேற்றினை வழங்குபவராகவும் காணப்படுகின்றார். இது தொடர்பில் CPL லின் அடைவுகளும் அவரது முயற்சியின் பாகங்களாகும்.

தேசிய திட்டமிடலை அடிப்படையாகக் கொண்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் 2013 முதல் 2014 வரையிலான கூட்டுப் பொறுப்பாட்சித் திட்டத்தில் குறிப்பிட்ட காலத்திற்கான கம்பனியின் இலக்குகளும் பணிகளும் குறிபிடப்பட்டுள்ளன. 2013 இன் கூட்டுப் பொறுப்பாட்சித் திட்டத்திலிருந்து உருவான தந்திரோபாயத் திட்டமானது தலா ஒவ்வாரு மரத்துக்கும் உயர்வான அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்கான உந்து சக்தியாக அமைந்தது.

கம்பனியின் அபிவிருத்தி நோக்கங்களைக் கருத்திற் கொள்ளும் போது ஒரு வரையறுக்கப்பட்ட திட்டம் காணப்பட்டதுடன், 2013இன் செயற்பாட்டுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் மற்றும் அமுல்படுத்தல் தந்திரோபாயங்கள் போன்றவை காணப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டு இரு மடங்கு சவால்களைகளுடன் ஆரம்பிக்கப்படுகின்றது.

கூட்டுப் பொறுப்பாட்சித் திட்டத்தில் தெளிவாகத் திட்டமிடப்பட்டுள்ளவாறு கருத்தாண்மை மற்றும் தொட்டுணரக்கூடிய மாற்றங்கள் மூலம் ஏற்படும் புதிய எதிர்பார்ப்புக்களுடன் வேலைத்திட்டத்தை அடைவது அதனுள் ஒன்றாகும். இயற்கையில் ஏற்படும் எதிர்வுகூற முடியாத நடத்தை மாற்றங்களான தடங்கல் மழைகளும் ஆண்டு பூராகவும் நிலவிய நீண்டகால வரட்சி போன்ற அபாயங்களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பதாகும்.

முகாமைத்துவக் கட்டமைப்பு, பெருந்தோட்ட அபிவிருத்தியிலுள்ள தந்திரோபாயங்கள், பெறுமதிசேர் பொருட்களின் உற்பத்தி போன்றவை பாரிய கருத்தாண்மை மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைகளில் அடங்குபவையாகும். மீளாய்வு காலப்பகுதியிலே பின்வருபவை பிரதான நோக்குகளும் அடைவுகளும் ஆகும்.

### I. சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் முகாமைத்துவக் கட்டமைப்பினை மீள்வடிவமைத்தல்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் அனுமதிக்கப்பட்ட தொழிலாளர்களின் அளவினை சேர்த்துக் கொள்வதற்காக புதிய பதவிகளுடன் நிறுவன ஒழுங்கமைப்பிலே தொழில் விபரணம் மற்றும் நிறுவன வடிவமைப்பு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அது போன்றே, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் மேற்பார்வை செய்தல், தீர்மானமெடுத்தலில் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவ அச்சுறுத்தல்கள் போன்றவை ஆண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் உருவாக்கப்பட்ட தெட்டுணரக் கூடிய வெளியீடுகளைக் கொண்ட புதிய பரப்புகளாகும். இது கம்பனியின் வியாபரச் சூழலின் மாற்றமடையும் காட்சிகளை கருத்திற் கொண்டு உருவாக்கபபட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உருவாக்கப்பட்ட ஏற்பாடுகளை அடிப்படையாக வைத்து செய்யப்பட்டதாகும். அதன்படி உருவாக்கப்பட்ட பகுதிகளாவன:

(1) சந்தை அபிவிருத்தியும் மேம்பாடும்

(11) திட்டமிடலும் மேற்பார்வை செய்தலும்

இரு வேறுபட்ட முகாமையாளர்களின் மேற்பார்வையின்கீழ் கொழும்பு நகர அலுவலகத்திலே உருவாக்கப்பட்டன.

இவ்விரு பகுதிகளும் சிலாபத்திலுள்ள தலைமை அலுவலக ஆளணியினருடன் நேரடித் தொடர்புகளையும் அந்நியோன்ய ஏற்பாடுகளையும் கொண்டுள்ளன.

# குறிப்பிடத்தக்கவைகள் – 2013

## II. மூலப்பொருட்களிலிருந்து பெறுமதி சேர் பொருளுக்கு மாறுதல்

பண்ணைவிலங்குகளுக்கு அப்பால், இடைப் பயிர்ச்செய்கை, பெறுமதியான பலகை மற்றும் ஏனைய பல்வேறு உற்பத்திகளுடனும் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பிரதான உற்பத்திகள் தேங்காயும் மரமுந்திரிகையும் ஆகும். சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது அந்தப் பிரதான பொருட்களை சந்தையில் நிலவும் ஒரு விலைக்கு நடுவர் அல்லது விநியோகத்தரின் மூலமாக சந்தைப்படுத்தும் நடைமுறையைக் கொண்டுள்ளது.

2012 ஆம் ஆண்டில் நடப்பட்ட அடிக்கல்லைப் பின்பற்றி மூலப்பொருட்களிலிருந்து பெறுமதிசேர் பொருட்களுக்கு மாறும் கொள்கை மாற்றமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான பொருளாதார முயற்சிகளுக்கு இடமளிப்பதற்காக ஆண்டினுள் கீழ்க்கட்டமைப்பு வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதன்படி சிலாபம் பயிர்ச்செய்கைக் கம்பனியானது கட்டட நிர்மாணம், இயந்திரக் கொள்வனவு மற்றும் ஆளணியினை புதிய தேவைகளுக்குப் பயிற்சியளித்தல், தேங்காயெண்ணெய் ஆலையொன்றை ஆரம்பித்தல் மற்றும் மரமுந்திரிகை செயற்படுத்தும் மத்திய நிலைமொன்றை ஆரம்பித்தல் போன்றவற்றை ஆண்டிறுதியில் பூர்த்தி செய்ய முடியுமாகியது.

அதன் பிரதான உற்பத்திகளுக்கு உயர் மட்ட வருமானத்தினை போட்டிச் சந்தையில் எதிர்பார்க்கும் அதேவேளை, சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது வேறுபாட்டினை அடையாளப்படுத்துவதற்கு

- பளுகஸ்வெவ பகுதித் தோட்டத்திலே தேங்காயெண்ணெய் ஆலையொன்றை நிறுவுதல்
- தம்பபன்னி பிரதேசத் தோட்டத்திலே மரமுந்திரிகை செயற்படுத்தும் மத்திய நிலையம் ஒன்றை நிறுவுதல் மற்றும்
- சிலாபம் பெருந் தோட்டக் கம்பனியின் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்காக விற்பனை நிலையமொன்றை (சல்பில) ஆரம்பித்தல்.

போன்றவற்றை உருவாக்க முடியுமாகியது.

மற்றும் 2013 திசெம்பர் மாதம் 19 ஆம் திகதி இந்த நிறுவனங்கள் அமைச்சர், கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்கள், கௌரவ விக்டர் அந்தோனி, பிரதியமைச்சர் போன்றோர் அப்பிரதேசத்திலுள்ள பிரதியமைச்சர்கள், அமைச்சின் அலுவலர்கள் மற்றும் பணிப்பாளர் சபையினரின் வருகையுடன் உத்தியாகபூர்வாகத் திறந்து வைக்கப்பட்டன.

## III. சந்தைக்குப் புதிய பொருட்களை அறிமுகப்படுத்தல்




எண்ணெய் ஆலை மற்றும் மரமுந்திரிகை செயற்படுத்தும் நிலயம் என்பவற்றைத் தொடர்ந்து சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது “கப்றுக்க தேங்காயெண்ணெய” மற்றும் “தம்பபன்னி பதப்படுத்திய மரமுந்திரிகை” எனும் இரண்டு புதிய வியாபாரப் பெயர்களில் இரண்டு பொருட்களை போட்டி விலை, தரத்துடன் சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

சிலாபத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ள புதிய விற்பனை நிலையமான “சல்பில” ஆனது வாடிக்கையாளரின் நன்மைக்காக சிலாபம் பெருந் தோட்டக் கம்பனீன் பொருட்களை ஒழுங்குபடுத்துவதில் விசேட கவனஞ் செலுத்துகின்றது.

## IV. நிலையான உற்பத்தியொன்றினைப் பராமரிப்பதற்காக பெருந் தோட்டங்களைப் புனருத்தாபனம் செய்தல்

CPL லிற்குச் சொந்தமான மரங்களில் மூன்றிலொன்றை விட அதிகமானவை 60 வயதையும் தாண்டியுள்ளதுடன், அறுவடை குறைவானவையாகவும் அல்லது அறுவடை அற்றவையாகவும் உள்ளன என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசினால் கைக்கொள்ளப்பட முன்னர் கீழ்ப் பயிர்ச் செய்கை மற்றும் புதிய பயிர்ச் செய்கைக்கான குறிப்பிடத்தக்க முயற்சிகள் தனியார் துறை முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறுகிய காலப் பயிர்களைப் போன்று தென்னை மரங்களை அதிக வயதானவுடன் ஒரேயடியாக அகற்றிவிடமுடியாதுள்ளது ஏனெனில், அவை சிலநேரங்களில் இடைவெளிவிட்டு அறுவடையைத் தரலாம் அல்லது நீண்டகாலத்திற்கு அறுவடையைத் தரலாம். அதனால், இந்த நடைமுறையானது வருமானத்திற்கான உடனடி நட்டங்களைத் தவிர்க்கக்கூடியவாறு திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

பல்வேறு காரணங்களினால் மொத்த மரங்களின் எண்ணிக்கை ஒவ்வோர் ஆண்டும் குறையும் போக்கு

# குறிப்பிடத்தக்கவைகள் – 2013

அதிகரித்துச் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இது எப்பேதும் முதிர்வடைதல் மற்றும் இயற்கைக் காரணங்களால் ஏற்படுகின்றது. இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக நட்டங்களை ஈடு செய்யக்கூடிய மற்றும் தேங்காய்கள் வளர ஆகக்குறைந்தது பத்து வருடங்களாவது செல்வதனால் நீண்டகாலத்திற்கு பெருந்தோட்டத்தினை பராமரிக்கக்கூடிய திட்டமிடப்பட்ட இடமாற்றம் மற்றும் புதிய நடுகை நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொடர்ந்தும் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இந்த நிலைமை மேலும் பாரதூரமாகியது.

2013 ஆம் ஆண்டில் மீள்நடுகைக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் அவ்வாறான புனருத்தாபனம் தேவைப்படுகையில்புதிதாக நடுதல் போன்ற இந்த நிலைமைச் சீர்படுத்துவதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டது.

இச் செயற்பாடானது நடைபெற்று வருவதுடன் கூட்டுப் பொறுப்பாட்சித் திட்டம் மற்றும் செயற்பாட்டுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு இது ஒரு சங்கிலித் தொடர் நடவடிக்கையாக தொடரப்படும்.

## V. இயந்திரமயமாக்கலும் ஊழியர் பற்றாக்குறையும்

பெருந்தோட்டங்களில் காணப்பட்ட பாரம்பரிய வேலைச் சூழலிருந்து புதிய பரம்பரையினர் சமூகத்திலிலுள்ள சமூக- பொருளாதார மாற்றங்களின் தாக்கத்தினால் தூரமாகியுள்ளனர். உற்பத்தி செலவு அதிகரிப்பு மற்றும் இலாப எல்லை சுருங்குதல் போன்றவற்றினால் முதலீட்டாளர்கள் அதைரியப்பட்டுள்ளதுடன் மதலீட்டாளர்கள் எந்தவொரு மட்டத்திற்கு இளைய பரம்பரையினரைக் கவரக்கூடிய அதிக செலவுடன் கூடிய நவீனமயப்படுத்தல் மற்றும் இயந்திரமயப்படுத்தலுக்கு அவர்கள் மாறுகின்றனர்.

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது ஒரு மத்தியஸ்தப் போக்கையே பின்பற்றுவதுடன் வேலைநீக்கத்தை ஏற்படுத்தாத வகையிலான இயந்திரங்களிலே முதலீட்டை மேற்கொண்டது. இழந்த ஊழியர்களின் வேலை வெற்றிடத்துக்கு பணிகளை வெளியகப்படுத்தாது முகாமைத்துவமானது நிலத்தை தயார்படுத்தல், பாரந்தூக்கல் மற்றும் போக்குவரத்து வேலைகளுக்கு ஐந்து டிராக்டர்களைக் கொள்வனவு செய்தது.

CPL இந்த மாற்றங்களை இரண்டு காரணங்களுக்காகத் தொடர்வதற்கு எதிர்பார்க்கின்றது. அவை,

(1) நிறுவனத்தை மிகவும் வினைத்திறனாக்குவது
(2) உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு

## VI. தென்னம்பயிர்ச் செய்கை முகாமைத்துவ மேற்பார்வை முறைமை

அமைச்சினால் தென்னம்பயிர்ச் செய்கை முகாமைத்துவ மேற்பார்வை முறைமை அறிமுகப்படுத்தப்படுவதற்குக் காரணம் பெருந்தோட்டத்துறையில் அவ்வாறானதொரு இணைய தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்படுகையில் வேறு பல முறைகளில் தரவுச் சேகரிப்பு மேற்கொள்ளப்படும் போது ஏற்படும் வேறுபாடுகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். தொடர்வாண்டில் CPL இந்த வசதியைத் தரவுச் சேகரிப்பு மாத்திரமின்றி விழுந்த தேங்காய்கள் களவு போதல் மற்றும் நாளாந்த வருகையிலுள்ள துஷ்பிரயோகங்களைக் குறைத்தல் போன்றவற்றிற்கும் பயன்படுத்தியுள்ளது. தொழிலாளர் சமூகமளிக்காமையானது இணைய மேற்பார்வை முறைமை மூலம் பதிவுசெய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது, இதனால் இது தொழிலாளர் பயன்பாடு மற்றும் அவர்களது நாளாந்த உற்பத்தித் திறனை மதிப்பிடுவதில் சிறப்பாகப் பங்களிப்புச் செய்துள்ளது.

இதன் பெறுபேறாக மேற்பார்வை முறைமை மூலம் பெறப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி சில தோட்டங்களில் களவுகள் பிடிக்கப்பட்டு புத்தகங்களுக்கு கொண்டு வரப்பட்டு நிவாரணமளிக்கப்பட்டது.

## VII. தூரவுள்ள அக்கறையுள்ளோருடன் கலந்துரையாடுவதற்கு வீடியோ கலந்துரையாடலைப் பயன்படுத்தல்

தென்னம் பயிர்ச் செய்கை முகாமைத்துவ முறையின் பாகமொன்றாக தூரவுள்ள அக்கறையுள்ளோருடன் கலந்துரையாடுவதற்கு வீடியோ கலந்துரையாடலைப் பயன்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது, இதன் மூலம் போக்குவரத்துச் செலவு, தற்காலிகமாக வேலையிடங்களுக்குச் சமூகமளிக்காமை மற்றும் போக்குவரத்தில் நேரத்தை வீணாக்கல் போன்றவற்றைக் குறைக்கலாம். CPL இந்த வசதியைப் பயன்படுத்தும் நிரல் அமைச்சுக்களின் ஒரு குழு நிறுவனமாக மாறியுள்ளதுடன் நிறுவனத்தின் நன்மையைக் கருதி அதன் தலைமையக ஆளணியினருடன் விளக்கம், பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் நடைபெறுகையில் அதில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்த அலுவலர்களிடமிருந்து பெறும் தீர்மானங்கள் போன்றவற்றை தொடர்ந்தும் பெற இது பயன்படுகின்றது. பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு இதன் பாவனையால் ரூபா 13,000/- நாளாந்தம் மீதப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

# குறிப்பிடத்தக்கவைகள் – 2013

## VIII. பண்ணை விலங்குகளை அபிவிருத்தி செய்தல்

2012 இல் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்களைத் தொடர்கையில் பளுகஸ்வெவ பண்ணைத் தொகுதியில் புதிய அபிவிருத்தித் திட்டமாக 2013 ஆம் ஆண்டில் முரா எருதுக் கூட்டமொன்றை அறிமுகப்படுத்தி அபிவிருத்தித் திட்டமொன்று ஆரம்பிக்கபட்படுள்ளது.

இந்த மாற்றத்தின் முக்கிய பண்பாவது கூட்டத்தில் ஆண் விலங்குகளை துாரமாக்கி தெரிவு செய்யப்பட்ட பசுக்களை கலந்து புதிதாக அறிமுகப்படுத்தப்பட் பண்ணை எருதுகளையும் கலந்து ஒரு செயற்கை விலங்கு விருத்தி (A1) நிகழ்ச்சியை பேராதனை மிருக வைத்தியப் பிரிவுடன் இணைத்து நடாத்துவதாகும்.

இந்நிகழ்ச்சியின் கீழ் விலங்குகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தப்படுவதுடன், கலப்பின இளம் விலங்குகள் மற்றும் பாலுற்பத்தி அதிகரிப்பு என்பவை அதிகரிக்கின்றன.

இந் நிகழ்ச்சியானது மீளாய்வாண்டில் கருத்தரிப்பு வீதத்தில் வெற்றிகரமான அதிகரிப்பு, புதிய விலங்குகளின் பிறப்பு மற்றும் பாலுற்பத்தி அதிகரிப்பு என்பவற்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்த உள்ளீடுகள் பண்ணை விலங்குத் திட்டத்தில் 2012 ஆம் ஆண்டு ரூபா 40,754 ஆகவிருந்த இலாபத்தை 2013 ஆம் ஆண்டில் ரூபா. 5,223,294 ஆக அதிகரித்துள்ளது.

மீளாய்வாண்டில் ஏற்பட்ட எதிர்பாராத வரட்சி ஏற்படாதிருப்பின் CPL திட்டமிட்டபடி மேலும் நன்மைகளை அடைந்திருக்கும்.

## உயிர் வாயு உற்பத்தி

உயிர் வாயுவானது பளுகஸ்வெவ தோட்டத்திலுள்ள விலங்குப் பண்ணையின் துணை உற்பத்தியாகும். முழு வாயு உற்பத்தியும் தயிர் மற்றும் யோகட் உற்பத்திக்கு எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இதனால் தேங்காயெண்ணெய் ஆலை சூடாக்குவதற்கு வாயுவைப் பயன்படுத்துகின்றது. பண்ணையிலுள்ள வாயு உற்பத்தி இயந்திரத்தின் வசதியானது எண்ணெய் ஆலையின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளதால் வணிக வாயுவைப் பயன்படுத்துவதை விட செலவு குறைவாகவுள்ளது.

## புண்ணாக்கு உற்பத்தி

புண்ணாக்கானது தேங்காயெண்ணெய் ஆலையின் எண்ணெய் உற்பத்தியின் இறுதியில் எஞ்சும் மீதியாகும். இது விலங்குணவாக விசேடமாக பசுக்களின் பாலுற்பத்தி அதிகரிப்பதற்காகப் பன்படுத்தப்படும். பளுகஸ்வெவ பண்ணையானது தேங்காயெண்ணெய் ஆலை ஆரம்பிக்கப்படும் வரை அதன் புண்ணாக்குத் தேவையை திறந்த சந்தையியிலிருந்தே நிறைவு செய்து வந்தது. 2013 டிசெம்பரில் முடிவடைந்த ஆலையினது பரீட்சார்த்த காலம் வரை தோட்டமானது எண்ணெய் ஆலைப் புண்ணாக்கினைப் பயன்படுத்துவதால் ரூபா.241,220.00 மீதப்படுத்த முடியுமானது.

## IX மனித வள அபிவிருத்தி

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வழிகாட்டலின் கீழ் வடிவமைக்கப்பட்ட வேலையிலுள்ளபோதே வழங்கும் பயிற்சி நெறியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்ட களப் பணியாளர்களுக்கு நன்மையளிப்பதாகவும் அமைந்திருந்தது. அதற்கு மேலதிகமாக, ஆறு மாத உள்ளக வெளியக பயிற்சி நெறிகள் ஏழு கள மேற்பார்வையாளர்களுக்கு அவர்களது இயலளவை மேம்படுத்துவதற்காக விளக்க, விஞ்ஞான அறிவு மற்றும் நடைமுறைப் பிரயோகங்கள் போன்றவற்றில் அறிவினை வழங்க சிரேஷ்ட முகாமையாளர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டது.

## X விருதுகள்

CPL ஆனது அதன் பாரிய உற்பத்தி பெருந்தோட்டத்திற்காக தேசிய விவசாய வியாபார விருது- 2013- வெண்கலம வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தெங்கு உற்பத்தி மற்றும் மக்கள் தோட்ட உற்பத்தி அமைச்சு அதன் கண்காட்சிக் கூடங்களுக்காக “தெயட்ட கிருள” தேசிய கண்காட்சியில் முதலாவது இடத்தை வென்ற போது சீபீஎல்லும் அதன் ஒரு பங்காளியானது.

# பணிப்பாளர்கள் சபை

1. **திரு. பண்டுக ஜயசிங்க** தவிசாளர்.்.பி.நி.அ
இல: 27, 1ஆம் தெரு, ரெம்பார்ட் வீதி, எத்துல்கொட்ட 0716884082
2. **திரு. ஏ.எம். சந்திரபால** சபை உறுப்பினறும் நிறைவேற்று அதிகாரியும்
முன்னால் செயலாளர், மாகாண சபைகள் அமைச்சு, ஓய்வுபெற்ற SLAS விஷேட வகுப்பு அலுவலர்
இல: 301, கோட்டை வீதி, நுகேகொடை. 0773321551
3. **திரு. ஓ.பீ.பீ. பத்திரனகே** சபை உறுப்பினறும் சேவை அதிகாரியும
வரகட வத்தை, உளுவிட்டிகே, காலி 0777903922
4. **திருமதி. பிரியங்கனி லியனகே** சபை உறுப்பினறும் திறைசேரி பிரதானியும்
சிரேஷ்ட முகாமையாளர், PED, திறைசேரி 0777898841
5. **திரு. சந்திர பெர்னான்டோ** சபை உறுப்பினர்
ஓய்வுபெற்ற பொலீஸ் மா அதிபதி (ஐ.பீ), அதிமேதகு சனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்
இல. 3, சர்ப்பெரி கார்டின்ஸ், கொழும்பு 04 011 2580561, 0112553321
6. **திரு. கே.பீ ரட்நாயக்க** சபை உறுப்பினர்
இல. 22, டிக்காய, புத்தல 0722229160
7. **திரு. ஆர்.ஆர்.எம். அமரதுங்க** சபை உறுப்பினர்
இல. 7.்.44, பாடசாலை வீதி, கங்கோடவிலா, நுகேகொடை 0777751433
8. **திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே** சபை உறுப்பினர்
தரிந்து, புத்தியகம, வீரகெட்டிய 0773088478

## முன்னால் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்.
### (01/01/2013 முதல் 24/09/2013).

1. **கலாநிதி சுனில் ஜயசேக்கர**
முன்னால் தவிசாளர்.்.பி.நி.அ பி.எஸ்சீ. (இரசாயனம் **Hons**. பேராதனை) பீஎச்.டி. (குயீன்ஸ்லண்ட், அவுஸ்திரேலியா)இ **C.Chem.**
61/12பி,மானெல் மாவத்தை, பழைய கெஸ்பாவ வீதி, நுகேகொடை 0714439944
2. **திரு. ஏ. எம். சந்திரபால** நிறைவேற்றுப் பணிப்பாளர்
முன்னால் செயலாளர், மாகாண சபைகள் அமைச்சு, ஓய்வுபெற்ற **SLAS** விஷேட வகுப்பு அலுவலர்
இல: 165/1யு, துட்டுகெமுனு வீதி, கொகுவல. 0773321551
3. **ஷான்த ஆர். டயஸ்** செயற்பாட்டு அதிகாரி
4. **திரு. டி.ஏ.டி தனன்சூரிய** சபை உறுப்பினர்
ஓய்வுபெற்ற பிரதி பணிப்பாளர், இலங்கை மகாவலி அதிகாரசபை
26/4, எம்பில்வத்தை, கட்டுவாவல மாவத்தை, பொரலஸ்கமுவ 0777 593422, 0112516885
5. **திரு. எம். எஸ். எம். சக்குல்லா** சபை உறுப்பினர்
54/2, மடம்பெல்ல வீதி, கொச்சிக்கடை 0777 555884
6. **திருமதி. பிரியங்கனி லியனகே** சபை உறுப்பினறும் திறைசேரி பிரதானியும்
4ய, சிரேட்ட முகாமையாளர், ீநுனு, திறைசேரி 0777898841
7. **திரு. சந்திர பெர்னான்டோ –** சபை உறுப்பினர்
5ய. ஓய்வுபெற்ற பொலீஸ் மா அதிபதி (ஐ.ஜீ.பி), அதிமேதகு சனாதிபதியின் சிரேட்ட ஆலோசகர்
இல. 3, சர்ப்பெரி கார்டின்ஸ், கொழும்பு 04 011 2580561, 011 2553321
8. **திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே** சபை உறுப்பினர்
தரிந்து, புத்தியகம, வீரகெட்டிய 0773088478

# முகாமைத்துவக் குழு

| | | |
|---|---|---|
| 1. | திரு பண்டுக ஜயசிங்க<br>தவிசாளர்.·.பி.நி.அ | 0716884082 |
| 2. | திரு ஏ.எம். சந்திரபால<br>நிறைவேற்றுப் பணிப்பாளர் | 0777774892 |
| 3. | திரு. ஓ.பீ.பீ. பத்திரனகே<br>சேவை அதிகாரி | 0777903922 |
| 4. | வெற்றிடம்<br>பொது முகாமையாளர் | |
| 5. | திரு. ஏ. டீ சில்வா<br>உ.பொ.மு. (பயிர்ச்செய்கைகள்) | 0714173203 |
| 6. | திரு. ஆஇ. ரட்நாயக்க<br>சிரேஷ்ட கணக்காளர் | 0718478569 |
| 7. | டபி.எல்.டி பெஇணான்டோ<br>உ.பொ.மு. பயிர்ச்செய்கைகள் பொறியியலாளர் | 077 7364907 |
| 8. | திரு. டபிள்யு. ஹேமசந்திர<br>பிரதம உள்ளக கணக்காய்வாளர் | 0718441536 |
| 9. | திரு எம்.எம். மர்லி<br>தோட்ட முகாமையாளர் (ì) | 0776746458 |
| 10. | எம். ஆர். அஷோக ஆனந்த<br>தோட்ட முகாமையாளர் (ì ì) | 0715285866 |
| 11. | திரு. டபிள்யு.கே. பிரதீப்<br>தொ.நுட்ப முகாமை ரூ அபிவிருத்தி | 0718351431 |
| 12. | திரு. பி. ஹெட்டியாராச்சி<br>அத்தியட்சகர், தம்பபாணி பிரதேச தோட்டங்கள் | 0718413943 |
| 13. | திரு. டீ.எம்.ஜீ.ஏ. திசாநாயக்க<br>அத்தியட்சகர், பிங்கிரிய பிரதேச தோட்டங்கள் | 0772249046 |
| 14. | திரு.ஜே.எச்.பெஇணான்டோ<br>அத்தியட்சகர், பளுகஸ்வெவ பிரதேச தோட்டங்கள் | 0714244248 |
| 15. | திரு. சீ. டயஸ்<br>அத்தியட்சகர், திவுலப்பிட்டி பிரதேச தோட்டங்கள் | 0773586974 |
| 16. | திரு.பி.எம்.யு.பி பஸ்நாயக்க<br>அத்தியட்சகர், மாதம்பை பிரதேச தோட்டங்கள் | 0773156774 |
| 17. | திரு.ஜீ.எம்.ஏ கருணாதிலக்க<br>அத்தியட்சகர், சிலாபம் பிரதேச தோட்டங்கள் | 0718363615 |

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது, கரையோரத்தில் புத்தளம் முதல் கட்டுநாயக்க வரையிலும் உள்நிலப் பிரதேசத்தில் நிகவெரட்டிய முதல் திவுலபிட்டிய வரையிலும் இரு வேறு காலநிலை வலயங்களின் செல்வாக்குக் கொண்ட பிரதேசங்கள் அதாவது உலர்வலயத்தில் புத்தளப் பிரதேச தோட்டங்கள் மற்றும் இடைவெப்ப வலயத்தில் பளுகஸ்வெவ தோட்டம், சிலாபம், பிங்கிரிய மாதம்பைப் பிரதேச தோட்டங்கள், ஈரவலயத்தில் திவுலபிட்டிய பிரதேசத்தையும் உள்ளடக்கிய 5,729.03ஹெக்டயர் பரப்பளவை முகாமை செய்கின்றது.பிரதான பயிரான தென்னை 4,501.16 ஹெக்டயரிலும், கஜு 812 ஹெக்டயரிலும் ஏனைய பரப்புக்களில்இடைநிலைப் பயிர்கள், விலங்கு வேளாண்மை, பெறுமதி மிக்க பலகைக்கான இடமும், கட்டடங்கள்,பாதைகளும் மற்றும் சில காணித் துண்டுகள் பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமற்றும் காணப்படுகின்றன.

## தேங்காய் உற்பத்தித்திறன்

உற்பத்தித் திறனும் அறுவடையும் பிரதேசத்திற்குப் பிரதேசம் மற்றும் வலயத்துக்கு வலயம் வேறுபடுகின்றது. உலர்வலயத்தில் குறைந்த அறுவடையும் ஏனைய வலயங்களில் அதிக அறுவடையும் பதிவாகியுள்ளது. உற்பத்தித் திறனானது வேறுபடுவதுடன் சராசரி ஒரு மரத்திற்கு 50 தேங்காய்கள் ஆகும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில், விளைச்சவில் வன்மையான வீழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணம் 2012 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நீண்டகால மற்றும் தீவிரமான வரட்சியாகும். இதனால் 19,239 இற்கும் அதிகமான முழுமையாக வளர்ந்த உயர் விளைச்சல் கொண்ட மரங்கள் இறந்ததுடன் 20,000 மரங்களிலிருந்து அறுவடை கிடைக்காமலும் வயது முதிர்ந்தும் போயின. இவ்வாறு விளைச்சல் கொண்ட மரங்கள் 313,048 ஆகக் குறைந்ததுடன் விளைச்சல் 9.5 மில்லியன் காய்களாக 2013 ஆம் ஆண்டில் குறைந்தது. இதனால் தவிர்க்க முடியாதவாறு உற்பத்தித் திறன் ஒரு மரத்திற்கு 31 காய்கள் என 2013 ஆம் ஆண்டில் குறைவடைந்தது பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| ஆண்டு | தேங்காய் விளைச்சல் (தேங்காய்கள்) | வித்தியாசம் % | விளைச்சல் கொண்ட மரங்கள் | வித்தியாசம் % | தலா ஒரு மரத்திற்கான உற்பத்தித் திறன் | இலங்கை உற்பத்தி | வித்தியாசம் % |
|---|---|---|---|---|---|---|---|
| 1992 | 20,782,648 | - | 421,875 | - | 49 | 2,296 | 0 |
| 1993 | 19,145,214 | -8% | 407,512 | -5% | 47 | 2,164 | -6% |
| 1994 | 21,382,314 | 12% | 426,722 | 3% | 50 | 2,622 | 21% |
| 1995 | 22,603,156 | 6% | 441,379 | 4% | 51 | 2,755 | 5% |
| 1996 | 19,336,658 | -14% | 421,716 | -4% | 46 | 2,546 | -8% |
| 1997 | 19,235,974 | -1% | 412,006 | -2% | 47 | 2,630 | 3% |
| 1998 | 18,921,808 | -2% | 415,718 | 1% | 46 | 2,522 | -4% |
| 1999 | 21,348,626 | 13% | 393,360 | -5% | 54 | 2,828 | 12% |
| 2000 | 23,216,882 | 9% | 399,454 | 2% | 58 | 2,396 | 9% |
| 2001 | 21,829,630 | -6% | 395,435 | -1% | 55 | 2,769 | -11% |
| 2002 | 15,031,795 | -31% | 413,465 | 5% | 36 | 2,392 | -14% |
| 2003 | 17,585,652 | 17% | 402,937 | -3% | 44 | 2,562 | 11% |
| 2004 | 18,354,614 | 4% | 401,162 | 0% | 46 | 2,591 | 1% |
| 2005 | 14,391,265 | -22% | 408,006 | 2% | 35 | 2,515 | -3% |
| 2006 | 17,070,324 | 19% | 411,968 | 1% | 41 | 2,785 | 11% |
| 2007 | 17,815,317 | 4% | 395,762 | -4% | 45 | 2,869 | 3% |
| 2008 | 16,280,051 | -9% | 378,333 | -4% | 43 | 2,908 | 1% |
| 2009 | 18,632,247 | 14% | 380,000 | 0% | 49 | 2,762 | -5% |
| 2010 | 18,256,007 | -2% | 340,586 | -10% | 54 | 2,317 | -16% |
| 2011 | 14,527,770 | -20% | 353,113 | 4% | 41 | 2,808 | 9% |
| 2012 | 15,807,753 | 9% | 312,456 | -12% | 51 | 2,940 | 5% |
| 2013 | 09,595,275 | -39% | 313,048 | 01% | 31 | | |

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்




இங்கு மீண்டும், 2011 ஆம் ஆண்டில் 353,111 ஆகவிருந்த விளைச்சல் கொண்ட மரங்கள் 2013 ஆம் ஆண்டில் 300,000 ஆகவும் 2012 இல் 15.8 மில்லியன்களாகவிருந்த விளைச்சலானது 2013 9.5 ஆக தலா ஒரு மரத்துக்கு 31 காய்களாகவிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தித்திறன் ஒரு மரத்துக்கு 50 ஆகக் குறைந்தது என்பது உண்மையாகும். இதற்கு தெளிவான காரணம் வரட்சி காரணமாக விளைச்சல் தரும் மரங்கள் அழிந்து போனமை மட்டுமேயாகும். வரட்சி காரணமாக இறந்த மரங்கள் நானாவித வருமானத்திற்காக விற்கப்பட்டது.

## 2012 இல் இறந்த விளைச்சல் தரும் மரங்கள்

| தோட்டம் | விளைச்சல் தரும் மரங்கள் |
|---|---|
| தம்பபன்னி | 10,898 |
| பிங்கிரிய | 5,821 |
| பளுகஸ்வெவ | 2,111 |
| சிலாபம் | 409 |
| மொத்தம | 19,239 |

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

தெங்கு பயிரிடப்பட்ட தோட்டங்களின் மொத்தப் பரப்பளவு (ஹெக்.) CPL 2013 டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று

| புரப்பு | பளுகஸ்வெவ | திவுலபிடிய | பிங்கிரிய | சிலாபம் | மாதம்பை | தம்பபன்னி | மொத்தம |
|---|---|---|---|---|---|---|---|
| விளைச்சல் தரும் தென்னை | 469.66 | 303.64 | 594.61 | 387.01 | 509.48 | 1,268.72 | 3,533.12 |
| விளைச்சல் தராத தென்னை | 145.50 | 100.00 | 425.3 | 98.35 | 94.17 | 104.72 | 968.04 |
| பயிரிடப்பட்ட மொத்த தென்னை | 615.16 | 403.64 | 1019.91 | 485.36 | 603.65 | 1,373.44 | 4,501.16 |




## 2013 ஆம் ஆண்டின் தென்னம் பயிர்களின் மொத்த வயதுப் பகுப்பாய்வு

டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று

| வயதுப் பிரிவு | 50 க்கு மேல | 20 – 49 | 10 – 19 | 5 – 9 | 0 - 4 | மொத்தம |
|---|---|---|---|---|---|---|
| மரங்களின் எண்ணிக்கை | 162,185 | 219,222 | 26,142 | 38,555 | 108,611 | **554,715** |
| % – மொத்தம் | 29% | 40% | 5% | 7% | 20% | |

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

விளைச்சலுள்ள தேங்காய்கள் விளைச்சலற்ற தேங்காய்கள் மொத்த தேங்காய் பயிர்ச்செய்கை







## ஈரமான நாட்களும் மழைவீழ்ச்சியும்

சராசரி மழைவீழ்ச்சியானது 1215 மிமீ ஆவதுடன் மீளாய்வாண்டில் கிடைத்த மழைவீழ்ச்சியின்போக்கானது பயிர்ச்செய்கைக்குப் பொருத்தமானதல்ல. வருட ரம்பத்தில் தொடர்ச்சியான மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்ற போதிலும் அதன் பின்னர் இடைக்கிடையாவது வருடம் பூராகவும் மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை. இந்த நீண்ட கால வரட்சியுடன் வருடம் பூராகவும் நாளாந்தம் 40 லீற்றர் நீர் தேவைப்படும் மரங்களின் உற்பத்தித்திறன் பாதிப்படைந்துள்ளது.

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

## 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் கிடைத்த மழைவீழ்ச்சிகளை ஒப்பிடல்

2011 இல் கிடைத்த மழைவீழ்ச்சியின் விபரம்

| தோட்டம் | ஜனவரி | | பெப்ரவரி | | மார்ச | | ஏப்ரல | | மே | | யூன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள |
| பிங்கிரிய | 86.40 | 11 | 124.00 | 7 | | | 404.80 | 18 | 292.80 | 8 | 32.9 | 6 |
| சிலாபம் | 83.52 | 12 | 79.44 | 8 | - | - | 291.00 | 14 | 75.00 | 9 | 30.00 | 9 |
| திவுலபிடிய | 65.50 | 4 | 15.50 | 3 | 50.50 | 4 | 142.50 | 15 | 150.50 | 10 | 57.50 | 8 |
| மாதம்பை | 56.00 | 5 | 37.00 | 4 | | - | 339.00 | 13 | 131.00 | 5 | 32.00 | 2 |
| பளுகஸ்வெவ | 59.30 | 9 | 82.30 | 10 | 76.60 | 5 | 280.80 | 13 | 46.50 | 6 | 23.00 | 4 |
| தம்பபன்னி | 174.00 | 8 | 136.00 | 9 | 10.00 | 2 | 233.00 | 12 | 6.00 | 1 | 13.00 | 2 |

| தோட்டம் | யூலை | | ஓகஸ்ட் | | செப்டம்பர் | | ஒக்டோபர் | | நவம்பர் | | டிசெம்பர் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள |
| பிங்கிரிய | 16.91 | 2 | 8.00 | 2 | 87.30 | 9 | 319.70 | 9 | 160.00 | 14 | 40.90 | 5 |
| சிலாபம் | 18.00 | 2 | 18.00 | 6 | 32.00 | 5 | 239.00 | 10 | 199.00 | 14 | 45.00 | 4 |
| திவுலபிடிய | 14.00 | 4 | 88.00 | 11 | 82.10 | 8 | 257.00 | 11 | 81.00 | 8 | 11.50 | 1 |
| மாதம்பை | - | - | 51.00 | 4 | 70.00 | 4 | 305.00 | 10 | 98.00 | 9 | 58.00 | 2 |
| பளுகஸ்வெவ | 12.00 | 2 | 15.50 | 2 | 29.50 | 5 | 220.00 | 13 | 155.50 | 16 | 44.00 | 6 |
| தம்பபன்னி | 5.00 | 1 | - | - | - | - | 146.00 | 10 | 211.00 | 13 | 82.00 | 6 |

## 2012'ல் கிடைத்த மழைவீழ்ச்சியின் விபரம்

| | ஜனவரி | | பெப்ரவரி | | மார்ச | | ஏப்ரல | | மே | | யூன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள |
| பிங்கிரிய | 4.70 | 2 | 108.30 | 7 | 117.00 | 7 | 194.30 | 13 | - | - | 64.40 | 13 |
| சிலாபம் | 39.00 | 1 | 88.00 | 7 | 34.00 | 4 | 198.00 | 11 | 1.00 | 1 | 65.00 | 10 |
| திவுலபிடிய | 31.00 | 2 | 129.00 | 5 | 15.50 | 2 | 159.40 | 10 | 16.50 | 2 | 140.90 | 14 |
| மாதம்பை | - | - | 263.00 | 9 | 46.00 | 4 | 196.00 | 7 | - | - | 112.00 | 10 |
| பளுகஸ்வெவ | 26.30 | 3 | 137.50 | 8 | 17.70 | 5 | 232.70 | 13 | 0.80 | 1 | 68.20 | 9 |
| தம்பபன்னி | 19.00 | 2 | 51.00 | 4 | 87.00 | 5 | 120.00 | 7 | - | - | 6.00 | 1 |

| தோட்டம் | ஜனவரி | | பெப்ரவரி | | மார்ச | | ஏப்ரல | | மே | | யூன் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள | மிமீ | ஈரமான நாட்கள |
| பிங்கிரிய | 21.80 | 2 | 57.90 | 9 | 21.90 | 4 | 454.50 | 14 | 336.40 | 11 | 308.10 | 11 |
| சிலாபம் | 12.00 | 3 | 36.00 | 4 | 37.00 | 5 | 416.00 | 18 | 202.00 | 8 | 325.00 | 10 |
| திவுலபிடிய | 51.50 | 6 | 143.00 | 14 | 64.90 | 9 | 409.40 | 19 | 227.60 | 13 | 98.00 | 4 |
| மாதம்பை | - | - | 51.70 | 5 | 43.00 | 3 | 406.20 | 13 | 191.90 | 8 | 214.00 | 5 |
| பளுகஸ்வெவ | 17.50 | 3 | 53.60 | 8 | 37.10 | 8 | 505.20 | 17 | 319.00 | 10 | 454.00 | 13 |
| தம்பபன்னி | - | 1 | 20.00 | 2 | 50.00 | 2 | 401.00 | 12 | 231.00 | 10 | 374.00 | 15 |

| தோட்டம் | 2013 ஜன டிசெ வரையிலான மழைவீழ்ச்சி மிமீ | 2013 ஜன டிசெ வரையிலான ஈரமான நாட்கள் | 2013 டிசெ மழைவீழ்ச்சி மிமீ | 2013 டிசெ ஈரமான நாட்கள் |
|---|---|---|---|---|
| பிங்கிரிய | 1209 | 69 | 58 | 04 |
| சிலாபம் | 1055 | 58 | 78 | 03 |
| திவுலபிடிய | 1668 | 99 | 08 | 01 |
| மாதம்பை | 1385 | 68 | 62 | 03 |
| பளுகஸ்வெவ | 1099 | 73 | 81 | 05 |
| தம்பபன்னி | 878 | 48 | 30 | 03 |
| **சராசரி** | **1215** | **69** | **53** | **03** |

# முகாமைத்துவக் கலந்துரையாடல்களும் பகுப்பாய்வும்

## மனித வள முகாமை

தற்போதுள்ள முகாமைத்துவ முறைகளுக்கு, விசேட பயிற்சியும் வெளிப்பாடும் தேவைப்படுகின்றது என்பதை உணர்ந்து, நிலையப் பொறுப்பதிகாரிக்கும் புதிதாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு தெரிவு செய்யப்பட்ட பயிலுநர்களுக்கும் ஒரு விசேட பயிற்சி நெறியொன்று வழங்கப்பட்டது. வெற்றிகரமான அபேட்சகர்கள் பயிற்சி வழங்கப்பட்டதன் பின்னர் தோட்டங்களுக்கு நியமிக்கப்பட்டனர். மேலதிகாரிகளுக்கும் உதவி மேலதிகாரிகளுக்கும கருத்தரங்கொன்று நடைபெற்றது. அதற்கு மேலதிகமாக, நிலையக் பொறுப்பதிகாரிகளின் செயற்றிறன் மதிப்பீட்டின் பின்னர் அவர்களுக்கான வெற்றிகரமான ஒரு நாள் செயலமர்வு நடைபெற்றது.



2013 இற்கான தேசிய விவசாய வியாபார வெண்கல விருது 2013-08-25 கிடைத்தது.



சிலாபத்தின் பார் பீச் ஹோட்டலில் 2013-12-19 இல் நடைபெற்ற ஊழியர் செயற்றிறன் பாராட்டு நிகழ்வு

# முதலீட்டுக் கலவை

## பயிரிடல் நிகழ்ச்சியின் கீழான புதிய பெருந்தோட்டங்கள்



சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியானது உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரித்தல் மற்றும் அதனால் பாரியளவில் கீழ்ப் பயிர்ச்செய்கைகளையும் புதிய பயிர்ச்செய்கைகளையும் பொறுப்பேற்பதற்கான விசேட நிகழ்ச்சியொன்றிலும் இறங்கியுள்ளது. முன்னர் கைவிடப்பட்ட அல்லது அலட்சியப்படுத்தப்பட்ட பாரிய பரப்பளவு கொண்ட காணிகளை இவ்விரிவுபடுத்தல் திட்டடத்துக்கு எடுக்கப்பட்டுள்ளமையால் 818 ஹெக்டயர்ஸ் பரப்பளவிலான தெங்குப் பயிர்ச்செய்கையானது 2008 முதல் 2013 வரை உருவாக்கப்பட்டது.

மறுபுறம், 50 வருடகாலமாக 161,000 க்கும் மேற்பட்ட தென்னங்கன்றுகளை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்காக அது கொண்டு காணப்படுகின்றது. சகல கிடைக்கத்தக்க காணிகளும் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தவகையில் பயன்படுத்த முடியாத பாரிய பரப்பளவு கொண்ட காணிகளும் குறைவாகப் பயன்டுத்தப்பட்ட தென்னங் கன்றுகளைக் கொண்ட காணிகளையும் புதிய பயிர்ச்செய்கை மற்றும் கீழ்ப்பயிர்ச்செய்கை மற்றும் முதிராத பயிர்ச்செய்கை முகாமைத்துவ அடிப்படையில் சீர்படுத்துவதற்கு ரூபா.90 மில்லியன்களை 2013ஆம் ஆண்டின் முதலீடாக 917 ஹெக்டயர்களுக்கு செலவளிக்கப்பட்டுள்ளது.

அதே வேளை எம்மிடம் 108,611 இளமரங்கள் (0 முதல் 4வருட கன்றுகள்) தற்போதுள்ளன. கீழ்ப்பயிர்ச்செய்கை நிகழ்ச்சிகள் மேலும் ஐந்து வருடங்களுக்கு மேற்கொள்ளப்படும். ஒரு கொள்கைத்தீர்மானமாக இறந்து போதல், விழுதல், குறுகலாதல் மற்றும் விளைச்சலின்மை போன்ற இயற்கைக்காரணங்களால் ஒவ்வொரு வருடமும் இழக்கும் மரங்களுக்குப் பதிலாக மீள்நடுகையைமேற்கொள்ளுதல் அவசியம் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த நிகழ்ச்சித் திட்டத்தை மிகவும் செயற்றிறனாக நிறைவேற்றுவது தற்போது அவசியமாகவுள்ளது.

## சீபீஎல்லின் கீழ்ப் பயிர்ச்செய்கைகள் மற்றும் புதிய பயர்ச்செய்கைகள்

| ஆண்டு | பயிரிடப்பட்ட பரப்பு (ஹெ) | கன்றுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2000 | 36.52 | 5773 |
| 2002 | 36.81 | 4878 |
| 2003 | 20 | 2766 |
| 2004 | 28.9 | 4569 |
| 2005 | 54.35 | 8592 |
| 2006 | 44.5 | 7035 |
| 2007 | 00 | 00 |
| 2008 | 33.94 | 6946 |
| 2009 | 101.10 | 15982 |
| 2010 | 107.93 | 17694 |
| 2011 | 128.17 | 20261 |
| 2012 | 246.59 | 38976 |
| 2013 | 200.51 | 31680 |
| **Total** | **1039.32** | **165,152** |

# முதலீட்டுக் கலவை




## கர மகரந்தச் சேர்க்கை

தென்னந் தொழிற்றுறைக்கு ஆரோக்கியமான மற்றும் உயர் விளைச்சல் கொண்ட மரங்கள் அவசியம் எனும் முக்கியமான தேவையை உணர்ந்து, அதிக உற்பத்தி மற்றும் உயர் இலாபத்துக்காக பகுதிகளையும் பாதைகளையும் கண்டுபிடித்து மற்றும் அதன்பெறுபேறாக அடிப்படைத் தேவையாக அதிக விளைச்சல் கொண்ட கன்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதைத்தொடர்ந்து, ஆரோக்கியமான, உயர் விளைச்சல் கொண்ட மற்றும் வரட்சியைத் தாங்கக்கூடிய கன்றுகளை தரக்கூடிய கரமகரந்தச் சேர்க்கை திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. முதலாவுத அவ்வாறான கன்றுகளை வளர்க்குமிடமானது பளுகஸ்வெவ தோட்டத்தில் உருவாக்கப்பட்டது.

இங்கு பிரதானமாக கலப்பினக் கன்றுகள், தெரிவு செய்யப்பட்ட தாய்மரம் மற்றும் சென் ராமன் தென்னை மரங்களுடன் கரமகரந்தச் சேர்க்கை செய்யப்பட்டு 2013 இல் ளுகஸ்வெவயில் ஒரு முழு வயலையும்

இதற்காகப் பயன்படத்தப்பட்டது முதல் ஏற்கனவே 20,000 இற்குமதிகமான கலப்பினக் கன்றுகள் உற்பத்தி

செய்யப்பட்டன.





மரபணு முறையில் மிகச்சிறந்த விதையினை கர மகரந்தச் சேர்க்கை மூலம் உற்பத்தி செய்தல்

| ஆண்டு | சன்ராமன | அறுவடை செய்யப்பட்ட விதைக்காய்கள் | கன்றுகளை வளர்க்குமிடத்தில் விதைக்கப்பட்டவை |
|---|---|---|---|
| | பூக்கள் | தேங்காய்கள | බීජ |
| 2012 | 2,556 | 4,847 | - |
| 2013 | 4,098 | 16,121 | 20,968 |
| மொத்தம் | 6,654 | 20,968 | 20,968 |

# முதலீட்டுக் கலவை

## விதைத் தோட்டம்

'கப்றுவன' எனம் கலப்பின தென்னம் விதைக் காய்களை உற்பத்தி செய்தல் / கன்றுகள் (கையினால் மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட மரபணுரீதியாக தெரியப்பட்ட / தெரிவுசெய்யப்பட்ட பச்சை டுவார்ப் சன் ராமன் ) கினியம தோட்டத்தில் காணப்படும் விதைத் தோட்டம்

CRI - CPL இணைந்த திட்டம்

(2012 இல் ஆரம்பிக்கப்பட்டது)

| விபரம் | 2012 | 2013 | மொத்தம் |
|---|---|---|---|
| இலக்கு | 40 ஹெ<br>6,525 கன்றுகள் | 18 ஹெ<br>2,700 கன்றுகள் | 58 ஹெ<br>9,225 கன்றுகள் |
| அடையப்பட்டவை - கன்றுகள் | 4,371 | 2,016 | 6,387 |
| % அடையப்பட்டவை | 67% | 75% | 69% |

## இடைப் பயிர்ச் செய்கை மற்றும் விலங்கு வேளாண்மை எருதுத் திட்டம்

500 முரா எருமைகள் அதிகரிப்புக் காணப்பட்ட பளுகஸ்வெ பாற்பொருட் திட்டத்திலே தயிரும் யோகட்டும் உற்பத்தி செய்யப்பட்டன. எருமைக் கூட்டத்தின் மற்றும் பாற்பொருட்களின் தரத்தை மேம்படுத்தலானது நெதர்லாந்து அதிகாரிகளின் விஜயத்தை அடுத்து நடைபெற்று வருகின்றுது. 2013இல் 34,948 ஆகக் காணப்பட்ட உற்பத்தியானது 31,078 தயிர்ச் சட்டிகளாகவும் 44,283 எண்ணிக்கையான 100 மி.லீ யோகர்ட் கோப்பைகளாகவும் மாற்றப்பட்டது. 2012 இல் 63 ஆகவிருந்த பிறப்புக்கள் 2013 இல் 87 ஆக சாதகமான இனப்பெருக்க வீதத்தைக் கொண்டு காணப்படுகின்றது.

## செம்மறியாட்டுத் திட்டம்

பிங்கிரிய பகுதித் தோட்ட செம்மறியாட்டுத் திட்டத்திலே 800 இற்குமதிகமான செம்மறியாடுகள் காணப்படுகின்றன. அதேவேளை மிருகங்களின் , செய்மறியாடுகளின் சாணமானது கீழ்ப்பயிர்ச்செய்கையில் இளங்கன்றுகளை போசிப்பதற்காகவும் உயிரியல் கீழ்ப்பயிர்ச்செய்கைக்காவும் பயன்படத்தப்படுவதால் அதன் மூலம் வருமானம் உழைக்கப்படுகின்றது. பிங்கிரியவில் 5000 கன்றுகளைக் கொண்ட ஒரு துண்டு நிலமும் பளுகஸ்வெவ தோட்டத்தில் 25,000 கன்றுகளைக் கொண்ட மற்றுமொரு துண்டும் ஏற்கனவே உயிரியல் கீழ்ப்பயிர்ச்செய்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

# முதலீட்டுக் கலவை

## கருவாத் திட்டம்

பின்வருமாறு பயிரிடப்பட்டு பராமரிக்கப்படுகின்து:

| தோட்டம் | நடப்பட்ட ஆண்டு | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **பிங்கிரிய** | 2011 | 7200 |
| **திவுலபிட்டிய** | 2011/2012 | 33295 |
| **மாதம்பை** | 2011 | 3212 |
| **மொத்தம** | | **43707** |

அதேவேளை கன்றுகள் அறுவடைக் கட்டத்தை அடைந்த போது அறுவடைத் தொழில் திறனைக் கொண்ட ஆட்களை ஈடுபடுத்தி அறுவடையை மேற்கொள்ளவும் குறிப்பிட்ட தோட்டங்களில் தொழிலாளர்களைப் பயிற்றுவிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ட்ரகன் பழத் திட்டம்

2006 இல் பிங்கிரியவிலுள்ள திட்டத்தில் கிடைத்த இலாபமானது அதற்கு முதலீடு செய்யப்பட்ட செலவைவிட ஏற்கனவே அதிகரித்தமையால் பின்வருமாறு புதிய இடங்களில் பயிரிடப்படுகின்றது:



பிங்கிரியப் பகுதித் தோட்டத்திலுள்ள ட்ரகன் புருட் திட்டம்

## மிளகுச் செயற்றிட்டம்

திவுலபிடிய பகுதித் தோட்டத்திலுள்ள செயற்றிட்டமானது நிரந்தமான வருடாந்த வருமானத்தைத் தருகின்றது.

## நீர்முருங்கை பயிரிடல்

மிருகங்களுக்குத் தீனியாகவும் தென்னைக்கு உயிரியல் பசளையாகவும் நடப்பட்டு வளர்க்கப்படுகின்றது. கிரிஸெடியாவைப் பயன்படுத்தி தம்பபன்னி டென்ட்ரோ திட்டத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டங்கள் காணப்படுகின்றன.

# முதலீட்டுக் கலவை

## செய்முறைப்படுத்தல், மேலும் செய்முறைப்படுத்தல் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல்

முதலீடு- பளுகஸ்வெவ தோட்ட தேங்காயெண்ணெய் ஆலை

விலை குறைவடையும்போது மற்றும் விற்பனை ஸ்திரமற்று மற்றும் பாதிக்கப்படும் போது தோட்டங்களில் அதிக எண்ணிக்கையான தேங்காய்கள் நிலத்தில் அழுகுவதற்கு விடப்பட்டு அல்லது கொப்பராவாக காய்ச்சப்படும். நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் இவ்வாறான சிக்கலான நிலைமைகள் மீண்டும் ஏற்படும் போது அதற்கு மாற்றுவழியாக மற்றும் இலாபத்தைப் பெறுவதற்காக CPL லிற்கு ஒரு எண்ணெய் ஆலையொன்றைத் திறப்பதற்கு முடிவு செய்தது.

கட்டத்திற்கு ரூபா. 1,842,384 உம் இயந்திரங்களுக்கு ரூபா. 6,141,285 உம் செலவளித்து மொத்தமாக ரூபா 7,983,669 முதலிட்டு இந்த எண்ணெய் ஆலையானது சகல தேவையான இயந்திரங்களுடனும் நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்தின் புதுப்பித்தல்கள் 2013-12-19 ஆம் திகதியன்று கௌரவ அமைச்சர் திரு. ஏ.பீ. ஜகத் புஷ்பகுமார அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இயந்திரங்களின் பரீட்சார்த்த காலப்பகுதியில் 10,384 கிராம் தூய தேங்காயெண்ணெயானது 1 ஆம் இலக்கக் கொப்பராவைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டதுடன் அதன் உபஉற்பத்திப் பொருளாக 6,030 கிராம் புண்ணாக்கு உற்பத்தி செய்யப்பட்டது. இதன் மூலம் ரூபா.2.4 மில்லியன் வருமானமாகக் கிடைத்தது.

இந்தக் கருத்திட்டத்திலிருந்து சிறந்த தர தேங்காயெண்ணெய் நுகர்வோருக்காக உற்பத்தி செய்யப்படுவதுடன் புண்ணாக்கானது பாற்பண்ணையிலுள்ள எருதுகளுக்கு உணவாக வழங்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் மூலம் ஒரு சிறந்த வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் உற்பத்திகள் சிலாபத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள எமக்குச் சொந்தமான விற்பனை நிலையத்தின் மூலமாக விற்கப்படுகின்றது.

சமையல் தேவைகளுக்காக “கப்றுக்க எண்ணெய்” மற்றும் தம்பபன்னி பதப்படுத்திய கஜு எனும் பெயர்களில் புதிய வகை தேங்காயெண்ணெயை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.



2013-12-19 இல் பளுகஸ்வெவ தோட்டத்தில் தேங்காய் எண்ணெய் ஆலையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

# முதலீட்டுக் கலவை

## கஜு கருத்திட்டம

### தம்பபன்னி பிரதேச தோட்டங்களிலுள்ள கஜு பதப்படுத்தும் நிலையங்கள்

தரமான மற்றும் உயர்ந்த அறுவடையை வழங்கும் விருத்தியாக்கப்பட்ட கஜு தம்பபன்னி பகுதி தோட்ட களைநிலத்திலிருந்து ரூபா.1.3 மில்லியன் பெறுமதியான தாவரங்கள் விற்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் அறுவடை செய்யப்பட்ட மொத்த கஜுவானது 66,000 கிலோகிராம்களாகும். ஒவ்வொரு வருடமும் பச்சை கஜுவானது பத்திரிகை விளம்பரம் மூலம் விற்பனை செய்யப்பட்டது. அதன் விலைகள் சாதகமாக ஏறவில்லை. அதன் பின்னர் தீர்மானிக்கப்பட்டதன்படி பெறுமதி சேர்க்கப்பட்டு பதப்படுத்திய கஜுவினை விற்பனை செய்வதற்காக தம்பபன்னி, புத்தளப் பிரதேச தோட்டத்திலே கஜு பதப்படுத்தும் நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக கட்டடத்திற்கு ரூபா.1,342,642 உம் இயந்திரங்களுக்கு ரூபா.157,700 உம் செலவளிக்கப்பட்டு மொத்த முதலீடாக 1,500,343 இடப்பட்டது. இந்தத் திட்டமானது கௌரவ பிரதியமைச்சர் திரு. விக்டர் அன்டனி பெரோ அவர்களால் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இதில் 10 ஊழியர்கள் கஜு பதப்படுத்தலுக்காகப் பயிற்றுவிக்கப்பட்டதுடன் இந்த பதப்படுத்தல் நிலையத்தில் தரமான பதப்படுத்திய கஜு உற்பத்தி செய்யப்பட்டது.



2013-12-19 ஆம் திகதி தம்பபன்னி தோட்டத்தில் கஜு பதப்படுத்தும் நிறுவனத்தை ஆரம்பித்தல்

இந்த கஜு செயற்றிட்டமானது ஏறத்தாழ 21 மில்லியன் வருமானத்தை உழைத்ததுடன் அதில் 2 மில்லியன் இலாபத்தை வழங்கியது.

| தோட்டம் | பரப்பு | நடப்பட்ட திகதி | கஜு மரங்களின் எண்ணிக்கை | அறுவடை செய்யப்பட்ட கஜு | செலவு | வருமானம் | தேறிய இலாபம் |
|---|---|---|---|---|---|---|---|
| தம்பபன்னி | 726.55 | 1992 | 28779 | 57,834 | 17,539,457 | 18,989,246 | 1,449,789 |
| சிலாபம் | 45.12 | 1993 | 1886 | 3502 | 497,866 | 980,420 | 482,554 |
| பளுகஸ்வெவ | 8.00 | - | 352 | 1662 | 267,913 | 467,022 | 199,109 |
| பிங்கிரிய | 36.20 | 1998 | 1355 | 3084 | 538,214 | 863,380 | 325,166 |
| திவுலபிடிய | 4.04 | 1998 | 200 | 71 | 6357 | 19,880 | 13,523 |
| மாதம்பை | 6.07 | 2012 | 1050 | 122 | 11,040 | 34,160 | 23,120 |
| மொத்தம | **825.98** | **-** | **35,622** | **66,274** | **18,860,847** | **21,354,847** | **2,493,261** |

# முதலீட்டுக் கலவை

## சிலாபம் தலைமையகத்திலுள்ள விற்பனை நிலையம்

இது தயிர், கஜு, யோகர்ட், தேங்காய்ப்பால், ஐஸ் கிறீம், பழங்கள் மற்றும் ஏனையவற்றை விற்பனை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடாகும்.



2013-12-19 ஆந் திகதியன்று சிலாபத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்ட விற்பனை நிலையம்

## மழைநீர் அறுவடை

2013 இல் ஏற்பட்ட கடுமையான வரட்சியைத் தொடர்ந்து, ஆறு பகுதிகளிலுள்ள ஏழு வாவிகளில் மழைநீர் அறுவடைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. பிங்கிரியவில் 55,000 இளங்கன்றுகள் நடப்பட்டன. (எதுருமண்ட வயல் இல.01 மற்றும் 4, கினியம 4 உம் 7 உம் சிறிலந்த வயல் இல.01 என்பவை இந்தவாவிகளிலிருந்து எடுக்கப்பட்ட நீரிலிருந்து நீர்ப்பாசனம் செய்யப்படகின்றது. மறுபுறம், பிங்கிரிய பிரதேசசிறிலந்த, மாதம்பை மூகலான, தம்பபன்னி பிரதேச கசமுண்டு தோட்டங்களிலிருந்து எடுக்கப்பட்ட வண்டல் மணல் மற்றும் மண்ணினால் இரண்டு லட்சம் வருமானத்தை உழைத்துள்ளோம்.





பிங்கிரியப் பிரதேசத் தோட்டத்திலுள்ள மழைநீர் அறுவடை

# முதலீட்டுக் கலவை

## தென்னை மரங்களைத் தாக்கும் தொற்றுக்களை அழிக்கும் மைடாக்களை விருத்தி செய்தல்

தீவின் தென்பகுதியில் தென்னை மரங்களைத் தாக்கும் வெலிக வாடும் நோய் காரணமாக அதிக பரப்பிலான முதிர்ந்த உயர் அறுவடை கொண்ட தென்னங் காணிகள் பாதிக்கப்பட்டு இதன் காரணமாக சகல மரங்களும் பிடுங்கப்பட்டு எரிக்கப்படுகின்றன. இந்த மைடாப் பிரச்சினையும் நாட்டின் ஏனைய பாகங்களில் பெரிய பிரச்சினையாகும். தென்னை ஆராய்ச்சி நிலையமானது பல இடர்ப்பாடான ஆராய்ச்சிகளின் பின்னர் இந்த மைடா அழிப்பானை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அளித்துள்ளது.

அதன்படி இரண்டு ஏசரியா மைடா அழிப்பான் முகாமைத்துவ ஆய்வுகூடங்கள் ஒன்று பளுகஸ்வெவ தோட்டத்திலும் ஏனையது திவுலபிடிய தோட்டத்திலும் இந்த மைடா அழிப்பான்களை உருவாக்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

இந்த மைடா அழிப்பான்களை வயல்களில் பயன்படுத்த ஆரம்பித்ததன் பின்னர் மைடா தாக்கும் தேங்காய்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளதை அவதானிக்கலாம்.

| | ஆண்டு | மைடா ஒழிப்பான்களைப் பயன்படுத்துதல் | உற்பத்தி | மைடா ஒழிப்பான்களின் வெளியீடு | | பரப்பளவு |
|---|---|---|---|---|---|---|
| | | உறைகள் | உறைகள் | உறைகள் | மரங்கள் | ஹெக் |
| பளுகஸ்வெவ | 2011 | 2,783 | 3,137 | 1,153 | 648 | 16 |
| | 2012 | 9,345 | 4,568 | 6,466 | 5,128 | 130 |
| | 2013 | 9,049 | 892 | 7,618 | 6,232 | 158 |
| | மொத்தம் | **21,177** | **8,597** | **15,237** | **12,008** | **304** |
| | | | | | | |
| கட்டுகெந்த | 2011 | - | - | - | - | - |
| | 2012 | 1,257 | 1,293 | 3,019 | 2,107 | 53 |
| | 2013 | 8,096 | 292 | 9,267 | 8,718 | 221 |
| | மொத்தம் | **9353** | **1585** | **12,286** | **10,825** | **274** |

# அபாய முகாமைத்துவம்

## அபாய முகாமைத்துவம்

நான்கு பகுதி அபாய காரணிகள் இதுவரை அடைளயாளங் காணப்பட்டுள்ளன. அவை காலநிலை மாற்றங்கள் காரணமாக உற்பத்தி பாதிக்கப்படுதல்,குறைந்த விலை காரணமாக விற்பனை பாதிப்படைதல், போன்றவற்றினால் எதிர் மறையான பாதிப்பு ஏற்படுகின்றது. ஏனையவையும் இப்போதும் கடந்த காலங்களிலும் பாதிக்கின்றன.

## உத்தேச கட்டுப்படுத்தல் தந்திரோபாயங்கள்

| அபாயக் காரணிகள் | அபாய மதிப்பீடு | அபாயத்தைக் கட்டுப்படுத்தும் தந்திரோபாயங்கள் |
|---|---|---|
| **உற்பத்தி பாதித்தல்** | பிரதானமாக தொடர்ந்தும் மாதக்கணக்கில் நிலவிய வரட்சி அடுத்த காரணம் 50 வருடங்களையும் தாண்டிய முதிர்ந்த மரங்கள் இறத்தல் | மண்ணினது ஈரப்பதனைப் பாதுகாக்க தும்பு புதைக்கப்பட்ட பாரிய வடிகால்களை அமைத்து தோட்ட மண்ணுக்கு மழை நீரை வழங்கல், குறைந்த நிழல் கொண்ட நீர்முருங்கை மற்றும் புரேரியாவை வளர்த்தல் மழைநீரை அறுவடை செய்வதற் அதிகமான வாவிகளை புதுப்பித்தல். இவற்றை பின்னர் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தலாம் புதிய மற்றும் கீழ் பயிர்ச்செய்கைகளில் பாரியளவு முதலீடு செய்தல். |
| **வியாபாரப் பொருள் வட்டம்** | நுகர்வோர் கேள்வியில் விலையும் விற்பனையும் தங்கியிருப்பதுடன் விற்பனை ஸ்தரமற்று மற்றும் குறையும் போது அதிகமானளவு தேங்காய்கள் தோட்ட நிலங்களில் பழுதடைந்து போகும் மீதி கொப்பராவாகக் காய்ச்சப்படும்.<br><br>பாம் எண்ணெய் போன்ற பிரதிப் பொருட்களுக்கு நுகர்வோர் கவரப்படுவதனால் | தேங்காய்கள் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை "பொல் பொல" மூலமாக விற்பனை செய்தல்தேங்காய்கள் உயர்தரக் கொப்பராவாக மாறுகின்றன.<br><br>அதில் ஒரு பகுதி ஏல விற்பனை மூலம் அடுத்த பெரிய பகுதி பளுகஸ்வெவ எண்ணெய் ஆலையில் எண்ணெயாக உற்பத்திசெய்யப்படுவதுடன் மீதி நல்ல விலை கிடைக்கும் போது விற்பனைக்காகக் எஞ்சியப்படுத்தப்படும். |
| **கடன் அபாயம்** | கொள்வனவாளர்கள் கடன் தீர்க்க தாமதமாகும் நிகழ்தகவு அதிகமாதல் அல்லது ஒழுங்குகளுக்கும் விதிகளுக்கும் இணங்கத் தவறுதல் | அதிகாரசபைகளில் தலையீட்டினை கடன்தீர்க்கும் வழிமுறைகளுக்குப் பெற்றுக்கொள்ளுதல் |
| **முகாமைத்துவ ஆளணியினர்** | குறைந்த உற்பத்திவெளியீடு காரணமாக உற்சாகம் குறைதல் ஊழியர்கள் சிறந்த சம்பளம் மற்றும் உயர் பதவிகளுக்காக ஏனைய தொழில்களுக்கு விலகிச் செல்லுதல் | செயலமர்வுகளும் பயிற்சி நெறிகளும் நடாத்தப்படுகின்றன. பதவிவுயர்வு முடியுமானளவு சிரேஷ்ட பதவிகளில் வழங்கப்பட்டுள்ளன. |

# நிதிமீளாய்வு

இந் நிதிக்கூற்றானது கம்பனியின் நிதிச் செயன் முன்னேற்றத்தையும் நிதிநிலைமையையும் நிர்ணயிக்கும் இந்த ஆண்டறிக்கையின் பகுதியாகும். இந்நிதி மீளாய்வானது கம்பனியின் முழு மொத்த நிதிச் செயன்முன்னேற்றத்தை ஒப்பீட்டு நோக்குகின்றது.

## கம்பனியின் நிதிச் செயன் முன்னேற்றம் பற்றிய ஒரு கண்ணோட்டம்

| | 2013 | 2012 | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் | பிரதான காரணி |
|---|---|---|---|---|---|
| வருமானம | 287 | 339 | (52) | (15%) | பயிர் அறுவடையானது 39மூ ஆல் குறைவடைந்துள்ளது |
| விற்பனைக் கிரயம் | 174 | 215 | (41) | (19%) | முற்றிய பெருந்தோட்டங்களில் ஆண்டினுள் பசளைப் பிரயோகத்திற்கான செலவு குறைந்தமை காரணமாக |
| ஏனைய வருமானம் | 76 | 57 | 19 | 33% | ஏனைய செயற்பாட்டுச் செலவு அதிகரித்தமை |
| நிலைய நிர்வாகச் செலவுகள் | 93 | 95 | (2) | (2%) | கொழும்பு அலுவலகத்திற்கான கட்டட வாடகை குறைந்தமை |
| ஏனைய செலவுகள் | 9 | 12 | (3) | (25%) | |
| நிதி வருமானம் | 21 | 37 | (16) | (43%) | வைப்புக்களுக்கும் நிலையான வைப்புக்களுக்கும் குறைந்த வட்டி வீதம் தேறியமை மீதி தேறிய இலாபம் குறைந்தமையால் குறைவடைந்தது. |
| நிதிச் செலவுகள் | 27 | 25 | 2 | 8% | ஜேஈடீபீ சொத்தினது குத்தகை வாடகையானது மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கத்தின் அதிகரிப்பு காரணமாக அதிகரித்துள்ளது. |

## நிதிச் செயன்முன்னேற்றம்

### வருமானம்

2013 ஆம் ஆண்டு அதாவது மீளாய்வாண்டில், கம்பனியானது ரூபா.287 மில்லியன் வருமானத்தைப் பதிவுசெய்துள்ளது, (2012 இல் அது ரூபா.339 மில்லியன் ஆகும்.) இது கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் 15% ஆனகுறைபாடாகும். ஆண்டினுள் அறுவடை செய்யப்பட்ட விளைச்சலின் வீழ்ச்சியானது இந்த விரும்பத்தகாத வேறுபாட்டிற்கு பிரதான காரணமாகும். 2013 இன் மொத்த அறுவடையானது 9,595,315 ஆன அதே வேளை 2012 இல் இது 15,807,753 காய்களாகும். இந்த கடந்தவருடத்துடன் ஒப்பீடுகையில் 39% ஆன வீழ்ச்சிக்கு 2012 இல் ஏற்பட்ட கடுமையான வரட்சியே காரணமாகும்.

## விற்பனைக் கிரயம்

2013 ஆம் ஆண்.டிற்கான விற்பனைக் கிரயமானது ரூபா. 174 மில்லியன்களாகும். அத்துடன் 2012 இல் இது ரூபா.
215 மில்லியன்களாக ரூபா41 மில்லியன் குறைவினைக் காட்டுகின்றது. இந்தசெலவுக் குறைவிற்குப் பிரதானகாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- முதிர்ந்த பெருந்தோட்டங்களுக்கான பசளைகளுக்கான செலவானதுரூபா 30 மில்லியன்களிலிருந்து ரூபா. 13 மில்லியன்களாக 2012 இலிருந்து 2013 வரை குறைவடைந்துள்ளது. இதற்குக் காரணம் 2013 இன்இறுதிக் காலாண்டிலே நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பசளைப் பிரயோகமானது மிகவும் வரையறுக்கப்பட்ட ஒரு பிரதேசத்திற்கு மாத்திரமே நடைபெற்றதனாலாகும்.

- மீளாய்வாண்டிலே கம்பனியானது பாரியளவு புதிய/கீழ் பெருந்தோட்டங்கள் மற்றும் முதிர்வடையாத பகுதிகளில் முதலீடு செய்தமையால் உயர்ந்தளவிலான பொதுக் கட்டணங்களை இவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால், முதிர்ந்த பிரதேசத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா.116 மில்லியனிலிருந்து ரூபா. 97 மில்லியன்களாகக் குறைந்துள்ளது. ( பெருந்தோட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பொதுக் கட்டணங்கள் குறித்த மீள் நடுகை மற்றும் புது நடுகை மற்றும் முதிராத பகுதிகளில் மூலதனமாகியுள்ள உண்மைச் செலவினங்களால் ஏற்பட்டதாகும்.)

# நிதிமீளாய்வு

JEDB குத்தகைச் சொத்துக்களுக்காக அரசிற்கு செலுத்தப்படும் வட்டி மற்றும் ஸ்திரமற்ற குத்தகை வாடகையை நிதிக் கிரயம் பிரதிபலிக்கின்றது. நிதிக் குத்தகைக்கு அரசிற்கு செலுத்தப்பட்டவட்டி 8% இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்தவருத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 25 மில்லியன்களாகவிருந்தது ரூபா 27 மில்லியன்களாகியுள்ளது. மொத்தத் தேசிய உற்பத்தி வீழ்ச்சியின் காரணமாக ஸ்திரமற்ற குத்தகை வாடகை அதிகரித்தமை பிரதான காரணமாகும்.

## நிதிக் குத்தகைக்காக அரசிற்குச் செலுத்தப்பட்ட குத்தகை வாடகை




## நிதிவருமானம்

நிதி வருமானமானது வைப்புக்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறுகிய கால நிதி வசதிகள் போன்றவற்றிலிருந்தான வட்டிவருமானத்தைப் பிரதிபலிக்கின்றது. 2012 ஆம் ஆண்டுடன ஒப்பிடுகையில் குறுகிய காலவைப்புக்களின் மீதான வட்டிவருமானமானது 31 மில்லியன் ரூபாவிலிருந்த 21மில்லியன் ரூபாவாக குறைந்துள்ளமைக்குக் காரணம் வட்டிவீதம் குறுகியகால வைப்புக்கள் குறைந்தமை காரணமாகும். இந்தவைப்பு குறைவானது புதிய பெருந்தோட்டங்கள் / முதிராததோட்டங்கள் மீதான 102 மில்லியன் ரூபா முதலீடும் மற்றும் குறுகியகால வைப்புக்களிலிருந்தான நிலையான சொத்துக்கள் மீதான முதலீடு 63 மில்லியன் ரூபா ஆகிய காரணங்களினால் ஏற்பட்டதாகும்.

ரூபா. 14.7 மில்லியன் அரசநிறுவனங்களிலிருந்து தற்காலிக நிதிவசதிகள் மூலம் வருமதியாகவுள்ளரூபா. 14.7 மில்லியன் ரூபா வட்டி வருமானத்தை 2010 முதல் 2012 வரை மீளப் பெறமுடியாது போனது. சிலாபம்பெருந்தோட்டமானது 2013 ஆம் ஆண்டின் கணக்குகளில் கிடைத்த வருடாந்த வட்டி வருமானத்தை அடையாளங் காண்பதில்லை எனத் தீர்மானித்தது.

## ஏனைய செயற்பாட்டுவருமானமும் உழைப்பும்

கம்பனியானது கஜுவிற்பனை, இறந்த தென்னை மரங்களின் விற்பனை, பலகை விற்பனை, நெல்வயல் குத்தகை, வாகனவிற்பனை மற்றும் ஏனையவை போன்ற ஏனைய செயற்பாட்டுந டவடிக்கைகள் மூலம் 76 மில்லியன் ரூபாய்கள் அதாவது கடந்தவருடத்துடன் ஒப்பிடுகையில் 34% இனை அதிகமாக உழைத்துள்ளது. ஏனைய வருமான மூலங்களின் விபரங்கள் நிதிக்கூற்றுக்களின் குறிப்பிலக்கம் 21 இல் காட்டப்பட்டுள்ளது.

## தேறிய இலாபம்

கம்பனியானதுமீளாய்வாண்டில் 72.9 மில்லியன் ரூபா (வரிக்குப் பின்னர்) தேறிய இலாபத்தைப் பதிவுசெய்துள்ளது. கடந்தவருட இலாபம் 77.9 மில்லியன் ரூபாவாகும். கம்பனியானது 2012 இல் கடுமையான வரட்சி நிலவியதால் 2013 ஆம் ஆண்டின் விளைச்சலில் 39% ஆன வீழ்ச்சி காணப்பட்டபோதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இலாபத்தினை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியின்றி பராமரிக்க முடியுமாகியுள்ளது.

# நிதிமீளாய்வு

## பங்கிலாபம்

முகாமைத்துவத்தினை 2008 இல் அரசு பொறுப்பேற்றதன் பின்பு சிலாபம் பெருந்தோட்ட நிறுவனமானது மெத்தப் பங்கிலாபமாக 215 மில்லியன் ருபாய்களை திறைசேரி / தங்கப் பங்காளருக்கு செலுத்தியள்ளது. 2008 முதல் 2013 வரை கம்பனி உழைத்த இலாபங்களை ஒப்பீடுகையில் இது குறிப்பிடத்தக்க உயர்ந்த அளவாகும். இவ்வாறு 2013 இன் இறுதியாகும் போது திறைசேறிக்குச் செலுத்தப்பட்ட மொத்தப் பங்கிலாபம் 376 மில்லியன் ருபாய்களாகும்.

| ஆண்டு | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | மொத்தம |
|---|---|---|---|---|---|---|---|
| தேறிய இலாபம் ருபா மில்லியன் | 10.5 | 98 | 75.2 | 77.6 | 77.9 | 72.9 | 412.1 |
| புதிய / கீழத் தேங்காய்ப்பயிர்ச் செய்கைமீதானமுதலீடுருபாமில்லியன் | 13 | 35 | 39 | 41 | 61 | 90 | 279 |
| திறை சேரிக்குச் செலுத்தப்பட்டபங்கிலாபம் ருபா மில்லியன் | 30 | 75 | | 75 | 35 | | 215 |

## மனிதவளத்தின் சேவை ஏற்பு

ஒரு நிறுவனத்தில் மனிதவளமானது மிகவும் முக்கியமானதொரு சொத்தாகும் என்பதை உறுதியாககவனத்திலெடுத்து கம்பனியானது 2013 ஆம் ஆண்.டில் நிறுவனமானது 12 மில்லியன் ருபாய்களைஊழியர்களுக்கு செயல் முன்னேற்ற ஊக்குவிப்பாக வழங்கியுள்ளது இது கடந்த வருடத்தின் 13 மில்லியன் ருபாய்களுடன் ஒப்படுகையில் ஒப்பிடுகையில் ஒரு ஊக்குவிப்புக் காணியாகும்.

அதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டில் 5.3 மில்லியன் ருபாய்கள் ஊழியர்களுக்கு 10% இலாபப்பகிர்வாக பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளுடன் தேங்காய் பயிர்ச்செய்கை கம்பனி உள்ளடங்கலாகச் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தப்படி வழங்கப்பட்டது.

## கம்பனியின் நிதிநிலைமைபற்றியஒருகண்ணோட்டம்

| மில்லியன் ருபாய்கள் | 2013 | 2012 | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் | பிரதான காரணி |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| குத்தகை ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 130 | 137 | (7) | (5%) | சொத்துக்களின் தேய்மானம் |
| உயிரியல் சொத்துக்கள் | 470 | 369 | 101 | 27% | புதிய / கீழ்த் தென்னம் பயிர்ச்செய்கை |
| சுதந்திரமான பொறித்தொகுதிமற்றும் உபகரணங்கள் | 137 | 96 | 41 | 42% | சொத்துக் கொள்வனவு |
| நடைமுறைச் சொத்துக்கள் | 356 | 454 | (98) | (21%) | வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் மற்றும் குறுகியகால முதலீடுகளின் விழ்ச்சி |
| **உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | | | | |
| பங்குதாரரின் நிதி | 825 | 788 | 37 | 5% | நிறுத்திவைத்த இலாபத்தின் அதிகரிப்பு |
| பிற்போடப்பட்ட பொறுப்புக்கள் | 42 | 33 | 9 | 27% | புதிய / கீழ் பயிர்ச் செய்கை மீதான முதலீடுகளால் ஏற்பட்ட அதிகரிப்பு |
| ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள் | 59 | 53 | 6 | 11% | காப்புறுதி நிபுணரின் மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டது. |
| குத்தகை செலுத்துவதற்கான பொறுப்புக்கள் | 115 | 117 | (2) | (2%) | அரச குத்தகை மீளச் செலுத்துகைகள் |
| வியாபார மற்றும் ஏனைய பொறுப்புக்கள | 45 | 54 | (9) | (17%) | வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் வீழ்ச்சி |

# நிதிமீளாய்வு

## புதிய / கீழ் பயிர்ச்செய்கைமீதான மூலதனமுதலீடுகள

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் முதிர்வடையாத பிரதேங்களில் நடுகை மற்றும் விஞ்ஞான முகாமைத்துவத்தின் கீழ் 2,293 ஏக்கரில் புதிய நடுகைப் பிரதேசங்களையும் கொண்டு, 2013 இல் தேங்காய் மீதான மொத்த முதலீடுகள் 61 மில்லியன் ரூபாய்களிலிருந்து 90 மில்லியன் ரூபாய் வரை அதிகரித்துள்ளது, அதற்கு மேலதிகமாக வரையறுக்கப்பட்ட சிலாபம் முகாமைத்துவ கம்பனியானது ஏனைய பல்வேறு பெருந் தோட்டங்களில் 12 மில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளது.







## மூலதன கட்டமைப்பு

### பங்குதாரரின் நிதி

2012 ஆம் ஆண்டில் 788 மில்லியன்களாகவிருந்த பங்குதாரரின் நிதிக் கட்டமைப்பில் பங்குதாரரின் நிதியானது மீளாய்வாண்டில் 825 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது மீளாய்வாண்டின் சொத்துக்களில் 75% ஆகும்.

# நிதிமீளாய்வு

## மொத்த சொத்துக்கள், பங்குதாரரின் நிதி, பங்குதாரர் நிதி விகிதம்




## காசுப் பாய்ச்சல்

கடந்த வருடத்தில் 93மில்லியன் ரூபாவாகவிருந்த செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறியகாசு117 மில்லியன் ரூபாய்களாக 24 மில்லியன் ரூபாய்களால் அதிகரித்துள்ளது. முடிவுற்ற ஆண்டில் காசும் காசுக்கு சமனானவைகளும் 134.8 மில்லியன் ரூபாய்களாகும். இதில் இலங்கை வங்கி நிரந்தர வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளும் அடங்கும்.

மீளாய்வாண்டில் ஏற்பட்ட மூலதனச் செலவீனங்கள் 166 மில்லியன் ரூபாய்களாகும் கடந்த வருடத்தில் இது 72 மில்லியன் ரூபாய்களாகும்.

## பங்கு மீதான உழைப்பு (EPS)

கடந்த வருடத்தின் பங்கு மீதான உமைப்பு 3.90 ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 2013 இல் பங்கு மீதான உழைப்பு 3.69 ஆகும்.




## நடைமுறைவிகிதம்

2013 இல் நடைமுறைச் சொத்துக்களுக்கும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குமிடையிலான விகிதம் உயர்வடைந்து காணப்படுகின்றது. 2013 இல் 7.8 விகிதமானது கம்பனி குறுகிய காலத் திரவத்தன்மை வேண்டுதல்களை நிறைவேற்றுவதற்குப் போதியளவு அர்த்தமுள்ள நிலையாகும்.



# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

பணிப்பாளர் சபையானது 31 டிசம்பர் 2013 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்டுள்ள கணக்குகளுடன் சேர்த்து கம்பனியின் ஆண்டறிக்கையை சமர்ப்பிப்பதில் பெருமிதம் அடைகின்றது. சுருக்கி ஒருங்கிணைக்கப்பட்டுள்ள நிதிகள் இலகு குறிப்பாக கீழே தரப்பட்டுள்ளது.

## சுருக்கி ஒருங்கிணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்று :

| | முடிந்த ஆண்டு 31.12.2013 (ரூபா) | முடிந்த ஆண்டு 31.12.2012 (ரூபா) |
|---|---|---|
| **தென்னை உற்பத்தி (தேங்காய்கள்)** | **9,595,315** | **15,807,753** |
| வருமானம் | 287,152,154 | 339,050,649 |
| விற்பனைச் கிரயம் | (174,262,628) | (215,317,782) |
| **மொத்த இலாபம்** | **112,889,525** | **123,732,868** |
| ஏனைய இதர வருமானங்கள் மற்றும் கிடைப்பனவுகள் | 76,206,174 | 56,977,730 |
| நிர்வாகச் செலவுகள் | (92,660,057) | (94,649,771) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | (8,613,780) | (12,315,133) |
| **தொழிற்பாடுகள் மூலம் உழைக்கப்பட்ட இலாபம்** | **87,821,863** | **73,745,695** |
| நிதி வருமானம் | 21,167,854 | 37,463,655 |
| நிதிச் செலவு | (27,169,196) | (24,984,006) |
| **வரிக்கு முன் இலாபம்** | **81,820,521** | **86,225,344** |
| வரிச் செலவுகள் | (8,072,974) | (8,250,497) |
| வருடத்துக்கான இலாபம் | **73,747,547** | **77,974,847** |
| ஏனைய விரிவாக்கள் வருமானம் | (828,622) | 0 |
| வருடத்துக்கான மொத்த விரிவாக்கள் வருமானங்கள் வரிகளின் பின் | **72,918,925** | **77,974,847** |
| பங்கு ஒன்றுக்கான உழைப்பு (ரூபா) | 3.69 | 3.90 |
| கூறப்பட்ட மூலதனம் | **200,000,010** | **200,000,010** |

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

## பிரதான செயற்பாடுகள்

கம்பனியின் பிரதான செயற்பாடுகளுள் உள்ளடங்குபவை:

தெங்கு மற்றும் ஏனைய விவசாய பயிர்களை பயிர்செய்தல், தயாரித்தல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் கால்நடை மற்றும் ஏனைய பயிர்மூலமல்லாத பல்வகைமை உற்பத்திகளைத் தயாரித்தல்.

## நிதிக் கூற்று

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான அறிக்கைகள் பக்கம் 45 - 66 களில் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வாளர் கூற்று

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் பக்கம் 39 இல் இணைக்கப்பட்டுள்ளன.

## கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதில் ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கம் 45 - 66 களில் இணைக்கப்பட்டுள்ளன. அத்துடன் முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது ஏற்று நடைமுறைப்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் எதுவுமில்லை.

## தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு

எதிர்காலத்தில் அதன் இயக்கங்களைத் தொடர்வதற்கு போதிய வளங்களை கம்பனி கொண்டுள்ளதையிட்டு பணிப்பாளர் சபையானது திருப்தியடைகின்றது. இதற்கமைய நிதிக்கூற்றுகள் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்படுகின்றன.

## பணிப்பாளர் சபை

வருடத்தின் போது கம்பனியில் பணியாற்றிய பணிப்பாளர் சபையினைச் சேர்ந்தோரின் பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவர்கள் பற்றிய சுருக்கமான விபரம் முன்னைய பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## தற்போதுள்ள பணிப்பாளர் சபை உறுப்பிணர்கள்

திரு. பண்டுக்க ஜயசிங்க
தவிசாளர்/பி.நி.அ, சபை உறுப்பினறும்
திரு. ஏ.எம். சந்திரபால
சபை உறுப்பினறும், நிறைவேற்று அதிகாரியும்
திரு. கீர்த்தி பத்திரனகே
சபை உறுப்பினறும் சேவை அதிகாரியும்
திருமதி. பிரியங்கனி லியனகே
சபை உறுப்பினறும் திறைசேரி பிரதானியும்
திரு. சந்திர எஸ் பெர்னான்டோ
சபை உறுப்பினர்
திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே
சபை உறுப்பினர்
திரு. கே.பீ ரட்நாயக்க
சபை உறுப்பினர்
திரு. ஆர்.ஆர்.எம். அமரதுங்க
சபை உறுப்பினர்

## முன்னால் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள். (01/01/2013 முதல் 24/09/2013).

கலாநிதி சுனில் ஜயசேக்கர
முன்னால் தவிசாளர்.'.பி.நி.அ
திரு. ஏ. எம். சந்திரபால
நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.கே.ஏ. ஷாந்த ஆர். டயஸ்
செயற்பாட்டு தவிசாளர;/ சபை உறுப்பினர்
திருமதி. பிரியங்கனி லியனகே
உறுப்பினரும் திறைசேரி பிரதானியும்
திரு. சந்திர எஸ் பெர்னான்டோ
சபை உறுப்பினர்
திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே
சபை உறுப்பினர்
திரு. டி.ஏ.டி தனன்சூரிய
சபை உறுப்பினர்
திரு. எம். எஸ். எம். சக்குல்லா
சபை உறுப்பினர்

## கணக்காய்வுக் குழு

சபையின் பின்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவில் கடமையாற்றி வருடத்தின்போது மூன்று மதிப்பீடுகளை நடத்தினர்

## தற்போதைய கணக்காய்வாரள் குழு

திரு. ஆர்.ஆர்.எம். அமரதுங்க
பிரதான நிறைவேற்று அதிகாரி
திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே
சபை உறுப்பினர்
திரு. கே.பீ ரட்நாயக்க
சபை உறுப்பினர்
திரு. ஏ. எம். சந்திரபால
கண்காணிப்பாளர்

## கணக்காய்வாரள் குழு 2013 ஜனவரி முதல் டிசம்பர் வரை

திருமதி. பிரியங்கனி லியனகே
பிரதான நிறைவேற்று அதிகாரி
திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே
சபை உறுப்பினர்

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

திரு. டி.ஏ.டி தனன்சூரிய
சபை உறுப்பினர்
திரு. ஏ. எம். சந்திரபால
கண்காணிப்பாளர்

## செயல்நிறைவேற்றுகை மீளாய்வு

வருடத்தின்போது கம்பனியின் செயல்நிறைவேற்றுகை பற்றிய மீளாய்வும் முக்கியமான முகாமைத்துவ மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் தலைவரின் மீளாய்வு மற்றும் முகாமைத்துவ மீளாய்வின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

## வருமானம்

இவ்வாண்டுக்கான கம்பனி வருமானம் ரூபா.287 மில்லியன்களாகும். இது தொடர்பான மேலதிக தகவல்கள் கணக்காய்வாளர் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

## நிதிப்பெறுபேறுகளும் பகிர்வுகளும்

கம்பனியின் வரிக்குப் பிந்தியதான இலாபமானது 72.9மில்லியனாகக் காணப்பட்டது (2012: ரூபா 77.9 மில்லியன்) மேலும் நிதிப்பெறுபேறுகளின் விபரங்கள் கணக்காய்வு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வழங்கப்பட்டுள்ளன.

## நிலையான சொத்துக்கள்

213ஆம் ஆண்டின்போது கம்பனியின் நிலையான சொத்துக்களில் 166 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. (2012: ரூபா 72 மில்லியன்). இதில் 102 மில்லியன் முதிர்ச்சியடையாத பெருந்தோட்டங்களிலும் (2012: ரூபா 64மில்லியன்)

ரூபா 64 மில்லியன் உபகரணங்கள் சொத்துக்கள் உட்கட்டமைப்பு அபிவிருத்தியிலும் முதலீடு செய்யப்பட்டது. (2012: ரூபா 8மில்லியன்) 2013ஆம் ஆண்டிலே ஐந்தொகை திகதியில் உள்ளவாறாக நடப்புச்சாராத சொத்துக்களின் தேறிய புத்தகப் பெறுமதியானது 737 மில்லியனாகும். (2012:ரூபா.602 Mil) இது பற்றியவிபரங்கள் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளில் வழங்கப்பட்டுள்ளன.

## குறுகியகால முதலீடுகள்

2012ஆம் ஆண்டில் 199 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2013ஆம் ஆண்டின் முடிவின்போது கம்பனியின் குறுகிய கால முதலீடுகள் 129மில்லியனாக காணப்பட்டன. மேலும் இதன் குறைப்பானது 2013ஆம் ஆண்டில் நடப்புச்சாராச் சொத்துக்களின் மீது முதலீடு செய்ததனாலும் பயிர்ச் செய்கையினாலும் 2013ஆம் ஆண்டிலே திறைசேரிக்கு உயர் பங்கிலாப கொடுப்பனவான 35 மில்லியனைச் செலுத்தியமையினாலுமாகும். இந்த முதலீடுகளுள் 88 மில்லியன் இலங்கை வங்கியின் நிலையான வைப்பு, இலங்கை வங்கியில் 33 மில்லியன் திறைசேரி மற்றும இலங்கை வங்கியின் 8 மில்லியன் நிதி முகாமைத்துவக் கணக்கு ஆகியவை உள்ளடங்குகின்றன.

## ஒதுக்கங்கள்

கம்பனியின் ஒதுக்கங்கள் வைத்திருப்பதால் இலாபத்தினால் முழுவதுமாக பிரதிநிதித்துவம் செய்யப்படுவதுடன் இதன் தொகையானது 2013 டிசெம்பர் 31இல் 625 மில்லியனாக காணப்பட்டது. (2012 = 588mil)

ஒதுக்கல்களில் நகர்வுகளும் ஆக்கக்கூறுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உரிமை முதலலை.

## மாற்றம் பற்றிய கூற்றுக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ளன.

கம்பனி கட்டாயம் வைத்திருக்க வேண்டிய மூலதனம் 2013 டிசெம்பர் 31இல் உள்ளவாறாக கம்பனி கட்டாயம் வைத்திருக்க வேண்டிய மொத்த மூலதனத்தொகை 2000,000,010 ஆகும். இதில் சாதாரண பங்குகள் 20,000,001ம் இதில் பொன்னான பங்கொன்றும் உள்ளடங்குகின்றது. இந்த வருடத்தின் போது பங்கு வழங்கள்கள் மேற்கொள்ளப்படவில்லை.

## பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும்.

வருநிகழ்வான பொறுப்புக்களும் மூலதனக் கடப்பாடுகளும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

## ஐந்தொகைக்குப் பின்னரான

நிகழ்வுகள் ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் கம்பனியின் மீது பொருள் ரீதியான தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய

இந்த அறிக்கையில் விபரிக்கப்பட்டுள்ளதற்கு புறம்பான வேறு எந்த நிகழ்வுகளும் பின்னர் நிகழவில்லை.

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் ஆர்வங்கள்

கம்பனிகளுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியான அல்லது மறைமுகமான ஆர்வங்களைக் கொண்டிருக்கவில்லை.

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

## பணிப்பாளஇகளின் பங்குகள்

கம்பனியில் பணிப்பாளர்களோ அல்லது அவர்களின் வாழ்க்கைத்துணையினரோ எவ்விதமான பங்குகளையும் கொண்டிருக்கவில்லை.

## தொழில்வாய்ப்பு

கம்பனியானது வேலைவாய்ப்பு உள்ளிட்ட அதனுடன் தொடர்புடைய தெரிவு செய்தல், பயிற்சி, பதவி உயர்வு, ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஆகியவற்றில் சமமான வாய்ப்புக் கொள்கையினை நடைமுறைப்படுத்தி வருவதுடன் கம்பனியின் தெரிவுகள் யாவும் கம்பனியின் நீடுறுதியான நன்மையைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.
கம்பனியானது பால்நிலை, இனத்துவம், சமயம், திருமண அந்தஸ்து, அரசியல் அபிப்பிராயம் மற்றும்உடல் ரீதியான அங்கவீனம் ஆகியவற்றினை கருத்தில் கொள்ளாது கம்பனியின் நலனுக்கு இயைபுற்று சமமான வாய்ப்பு எனும் கொள்கையை பின்பற்றிவருகின்றது.

## நியதிச்சட்ட கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் அவர்களது அறிவுக்கு எட்டிய வரையில் கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய சகல வரிகள், தீர்வைகள், கொடுப்பனவுகள், கம்பனியின் ஊழியர்களின் சார்பில் அவர்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள், வரிகள் போன்றவற்றையும் ஏனைய கம்பனியினால் செலுத்தப்பட வேண்டிய சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளையும் ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறாக செலுத்தியுள்ளனர் அல்லது பொருத்தமானவாறாக அதற்கான ஏற்பாடுகளை வழங்கியுள்ளனர்.

## கணக்காய்வாளர்கள்

2013ஆம் ஆண்டுக்கான கணக்குகள் எம்.எஸ். ஐயர் அன்ட் கம்பனி பட்டயக் கணக்காளர்களினால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளன.

## வருடாந்த அறிக்கை

பணிப்பாளர் சபையானது 2013ற்கான அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை 2014 ஜூன்30ஆந் திகதி நடந்த கூட்டத்தில் அங்கீகரித்துள்ளது.

## வருடாந்த பொதுக்கூட்டம்

வருடாந்த பொதுக்கூட்டமானது கொழும்பு-01, கிரேனட் ஓரியன்டல் ஹோட்டலில் 2014 ஜூன் 30ஆந் திகதி திங்கட்கிழமை பி.ப1.30 மணிக்கு நடைபெறும். வருடாந்த பொதுக்கூட்டம் பற்றிய அறிவித்தலும் அவற்றின் புறக்ஸி படிவமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்காகவும் அதன் சார்பிலும்



கலாநிதி சுனில் ஜயசேகர - தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்
கூட்டுப்பங்காண்மை ஆலோசனைச் சேவைகள் பிறைவேட் லிமிடட்



செயலாளர்கள் - வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் கொழும்பு.

# நிறுவனத்தின் நிர்வாக அறிக்கை

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபையானது, நேர்மை, நிறுவனரீதியான நடுநிலைப் போக்கு, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுகின்றது. இது கம்பனியில் ஆர்வம் கொண்டுள்ளவர்களுடன் சிறப்பான தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்குப் பெரும் பங்களிப்புச் செய்தது.

நியதிச்சட்டத் தேவைப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் ஸ்தீரத்தன்மை என்பனவும் வர்த்தகப் பெறுமதி அதிகரிக்கும் முறையில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், செயலொழுங்குகள், நடைமுறைகள், சரியான கட்டமைப்புக்கள் மற்றும் தகவல்கள் என்பன மேற்படி தொடர்புகளை உறுதிப்படுத்துவதில் சிறந்த பங்களிப்புச் செலுத்தின.

## பணிப்பாளர் சபை

கம்பனியின் பணிப்பாளர் சபை கம்பனியின் செயலாற்று கைக்குப் பொறுப்பாகவுள்ளதுடன் இறுதியில் அதுதொடர்பில் பொறுப்புக்கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளது.

## பொறுப்பு

அடிப்படைக் கொள்கைகளையும் உபாய முறைக் குறிக்கோள்களை உருவாக்குவதற்கும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபை கடமைப்பட்டுள்ளது. கம்பனியின் நிதித் தகவல்களின் நம்பகத் தன்மை மற்றும் உள்ளக நிர்வாக முறையின் வெற்றி என்பவற்றுக்கான இறுதிப் பொறுப்பையும் பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.

## கட்டமைப்பு

தலைவரையும் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவரையும் கொண்ட பணிப்பாளர் சபையானது 2013 ஆம் ஆண்டில் எட்டுப் பணிப்பாளர்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

## பணிப்பாளர் சபைக் கூட்டங்கள்

2013 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட வருடாந்த நிகழ்ச்சிநிரலுக்கு இணங்க மாதாந்தம் பணிப்பாளர் சபைக்கூட்டங்கள் நடாத்தப்படுகின்றன. கம்பனியின் உபாய முறை வழிமுறைகள், வருடாந்த வரவுசெலவுத் திட்டம், அனைத்துச் செயற்பாடுகளினதும் முன்னேற்றம், மூலதனச் செலவினங்கள் என்பன இக்கூட்டங்களின் போது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு கூட்டத்தை நடாத்துவதற்கு நியாயமான ஒரு காலப்பகுதிக்கு முன்னர் அது தொடர்பான கடிதங்கள் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## கணக்காய்வுக் குழு

கம்பனியின் கணக்காய்வுக் குழுவில் நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் மூவருடன் பணிப் பாளர்கள் நான்கு பேர் அங்கம் வகிக்கின்றனர். பொதுத் திறைசேரியின் பிரதிநிதியும் நிறைவேற்று தரமல்லாத பணிப்பாளருமான திரு. ஆர்.எம். அமதரதுங்க அவர்கள் கணக்காய்வுக் குழுவின் தலைவராகக் கடமையாற்றுகின்றார். இவ்வருடத்தில் 03 மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. காலாண்டு அடிப்படையில் கூட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. கம்பனியின் தலைவர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், உள்ளகக் கணக்காய்வாளர், சிரேட்ட கணக்காளர் ஆகியோர் இக்கூட்டங்களில் அழைப்பின் பேரில் பங்கேற்கின்றனர்.

## சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதல்

சங்கத்தின் நியதிச் சட்டம், சங்கத்தின் யாப்பு மற்றும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் தொடர்பில் ஏற்புடையதாகும் ஏனைய சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கிய வகையில் செயற்படுவதற்கு பணிப்பாளர் சபை இயன்றவரை அனைத்து முயற்சிகளையும் செய்கின்றது. இலங்கை கணக்கீட்டுத் தரநியமங்களுக்கு இணங்கியதாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குப் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

# பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிதி றிக்கைப்படுத்தல் தொடர்பில் தாம் கொண்டுள்ள பொறுப்பை சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது. கம்பனியின் கணக்காய்வாளரான அய்யர் அன்ட் கம்பனி அவர்களின் பொறுப்புக்கள் தொடர்பில் தங்களது அறிக்கையில் சுருக்கமாக விளக்கியுள்ளனர்.

இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள 2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் வருடத்திற்கான கணக்குகளை இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு இணங்கத் தயாரித்துள்ளதுடன் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க தகவல்களை அதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. கம்பனி பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தியுள்ளது எனவும் அம் முறைகளும் கணக்கீட்டுக் கொள்கைப்படுத்தல்களும் இந்த நிதிக் கூற்றைத் தயாரிக்கும் போது எப்போதும் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும் பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது. இத்தரநியமங்கள் மாற்றமடையும் சந்தர்ப்பங்கள் ஏதும் இருப்பின் அவற்றை உரிய முறையில் சுட்டிக்காட்டி அதற்கான நியாயங்கள் கூறப்பட்டுள்ளன. யதாரத்த பூர்வமான முறையிலும் நியாயமான முறையிலும் அனைத்துத் தீர்மானங்களும் மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களும் மதிப்பீடுகளும் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் கூறும் பொறுப்பை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். கம்பனி தமது நிதி நிலைமையையும் உண்மைத் தன்மையையும் காட்டும் கணக்கீட்டு அறிக்கைகளை உரிய முறையில் பேணி வரப்படும் என பணிப்பாளர் சபை உறுதியளிக்கின்றது.

வருடாந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் மூலம் கம்பனி நாளாந்த செயற்பாடுகள் உண்மையான முறையிலும் நியாமான முறையிலும் மேற்கொள்ளப்படுகின்றன என்று பணிப்பாளர் சபை 31 டிசம்பர் 2013 இல் உறுதிப்படுத்துகின்றது. கம்பனியின் உள்ளக நிர்வாகத் தொகுதி தொடர்பான முழுமையான பொறுப்பு பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரவத்தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி உள்ளகச் சுருக்கம், உள்ளகக் கணக்காய்வு , நிதி மற்றும் வேறு நிர்வாக முறைகள் மூலம் ஏற்படக்கூடிய திரவத் தன்மை தொடர்பான பிழையான கூற்றுக்கள் மற்றும் மோசடிகளை அல்லது நியாயமான காலத்தினுள் அறிந்து கொள்வதற்கு முடியுமான முறையில் அனைத்துச் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும் கொடுக்கல் வாங்கல்களை உரிய முறையில் காட்டுவதற்கு முடியுமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதிப்படுத்துகின்றது. எதிர்வரும் பல வருடங்களில் தொடர்ச்சியாகப் பேணி வருவதற்கான வளங்கள் போதியளவு உள்ளது எனவும் பணிப்பாளர் சபை கருதுகின்றது. அத்துடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கின்ற போது தொடர்ச்சியாக மாற்றமின்றிப் பின்பற்றப்படும்.

கம்பனியின் கணக்காய்வாரள்களான பட்டயக் கணக்காளர்களான அய்யர் அன்ட் கம்பனி தனது பொறுப்பை மேற்கொள்வதற்கு அவசியமான அனைத்துத் தகவல்களையும் ஒத்துழைப்பையும் பணிப்பாளர் சபை வழங்கியது.

கணக்காய்வாளர்கள் அனைத்து நிதிக் கூற்றுக்களையும் நிதி அறிக்கைகளையும் உரிய தரவுகளையும் சோதனையிட்டு தங்களது சுதந்திரமான கருத்துக்களைச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கை இதில் உள்ளடக்கப்படட்டுள்ளது.

கம்பனி நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது செலுத்த வேண்டியிருந்து அறியப்பட்ட அனைத்து வரிகளும் கம்பனியின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளும் கம்பனி செலுத்த வேண்டிய ஏனைய நியதிச்சட்டகொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளன அல்லது செலுத்துவதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளன என பணிப்பாளர்கள் உறுதியளிக்கின்றனர்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,
வ/ப கோபரேட் அட்வைசர் சேர்விஸ்ஸ (தனியார்)
கம்பனி செயலாளர்கள் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

சிலாபம் பெருந்தோட்ட லிமிடட்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது, 2013 ஜூன் 2 ஆம் திகதிய நல்லாட்சிக்கான அரச தொழில்முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள் மற்றும் பொதுத்தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2010 டிசம்பர் 14 ஆம் திகதிய பீ.ஈ.டீ. / 55 ஆம் இலக்க சுற்றுநிரூபம் ஆகியவற்றின் பிரகாரம் தாபிக்கப்பட்டதாகும்.

2013 ஆம் ஆண்டின் பின்வரும் திகதிகளில் மூன்று கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றன.

- 2013 ஏப்பிரல் 3ஆம் திகதி
- 2013 ஜூன் 28 ஆம் திகதி
- 2013 டிசம்பர் 27 ஆம் திகதி

கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள் பின்வருமாறு.

| அலுவலர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|
| 1. திருமதி. பிரியங்கானி லியனகே | தவிசாளர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 2. திரு. டீ.ஏ.டீ.ஆர். தனன்சூரிய | அங்கத்தவர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 3. திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே | அங்கத்தவர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 4. திரு. ஏ.எம். சந்திரப்பால | கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பாளரும் சிலாபம் பெருந்தோட்ட லிமிடட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் |

2013 செப்டம்பரில் புதிய பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர், கணக்காய்வுக் குழுவின் அங்கத்துவமானது பின்வருமாறு மாற்றப்பட்டது.

| அலுவலர்களின் பெயர்கள் | பதவி |
|---|---|
| 1. திரு. ஆர்.எம். அமரதுங்க | தவிசாளர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 2. திருமதி. பிரியங்கானி லியனகே | அங்கத்தவர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் (திறைசேரிப் பிரதிநிதி) |
| 3. திரு. கே.பீ. ரத்னாயக்கா | அங்கத்தவர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 4. திரு. ஐ.எம்.ஆர். விதானகமகே | அங்கத்தவர் - கணக்காய்வுக்குழு - சி.பெ.லிமிடட் |
| 5. திரு. ஏ.எம். சந்திரப்பால | கணக்காய்வுக் குழுவின் அவதானிப்பாளரும் சிலாபம் பெருந்தோட்ட லிமிடட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் |

| கணக்காய்வுக் குழுக் கூட்டத்தின் தினங்கள் | கலந்தாராய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கணக்காய்வு மற்றும் புலனாய்வு அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|
| 2013 ஏப்பிரல் 3 | 13 |
| 2013 ஜூன் 28 | 12 |
| 2013 டிசம்பர் 27 | 15 |

மேற்படி அறிக்கைகள் மற்றும் கிரம முறையிலான நடவடிக்கைகள் தவிர, உள்ளகக் கணக்காய்வு அலுவலர்கள் தோட்டங்களிலிருந்து பெறப்பட்ட ஐம்பத்தி எட்டு (58) பணிக்கொடை உறுதிச்சீட்டுக்களைப் பரீட்சித்து அவற்றை சிபாரிசு செய்துள்ளனர்.

சிலாபம் பெருத்தோட்ட லிமிடட்டின் முகாமைத்துவமானது கணக்காய்வு மற்றும் புலனாய்வு அறிக்கைகளை நுட்பமான முறையில் மீளாய்வு செய்து, குறித்த தவறுகளைத் தடுப்பதற்கான தீர்வு நடவடிக்கையினை எடுத்துள்ளதோடு அவசியமானவிடத்து மேலதிக புலனாய்வினையும் முன்னெடுத்துவருகிறது.

AIYAR & CO.
Chartered Accountants.

"Havelock Central"
No. 104-4/1, Havelock Road,
Colombo 05,
Sri Lanka.
P.O.Box : 1029
Telephone : +94-11-2505516 - 17
Telefax : +94-11-2505518
Email : aiyar@slt.lk

## சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை

வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் பங்குதாரர்களுக்கு,

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதிக் கூற்று எம்மால் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதோடு, 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான நிதி நிலமைக் கூற்றினையும் 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பரந்த வருமானக்கூற்றையும் , பங்குரிமை மாற்றக்கூற்றினையும், முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றினையும், குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம் மற்றும் ஏனைய விரிவான தகவல்கள் போன்றனவற்றை இந்நிதிக் கூற்று உள்ளடக்குகின்றது.

## நிதிக் கூற்றுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப , இந்நிதிக் கூற்றினைத் தயாரித்து நியாயமான முறையில் முன்வைத்தலானது கம்பனி முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். அதே போல தவறுகள் மற்றும் மோசடிகளின் காரணமாக எந்த விதமான தவறான கூற்றுக்களிலிருந்து தவிர்த்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முகாமைத்துவத்தைப் போல அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையும் இன்றியமையாததாகும்.

## கணக்காய்வாளரின் பொறுப்பு

எமது கணக்காய்வு நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இந்நிதிக் கூற்று தொடர்பான அபிப்பிராயம் ஒன்றை வெளியிடுவதே எமது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப எமது கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கணக்காய்வினை நெறிமுறை தேவைகளுக்கு இணங்குவதாக, உரிய முறையில் திட்டமிடலும், மற்றும் அதனை அளவு ரீதியான தவறுகள் காட்டப்படுவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதாக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக் கொள்கதற்கு அந்நியமங்கள் அவசியமாக உள்ளன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளையும் வெளிப்படுத்தப்பட்ட விபரங்களையும் குறித்து கணக்காய்வு சாட்சிகளுடன் செயல்படும் முறைகள் கணக்காய்வில் அடங்கியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட முறைகள் கணக்காய்வாளரின் தீர்ப்புடன் சார்ந்திருக்கின்றதுடன், நிதிக்கூற்றுக்களிலுள்ள அபாயகரமான முக்கியமான வஞ்சனைகள் அல்லது தவறுகள் மதிப்பீடு செய்தலும் அடங்கியுள்ளது. மதிப்பீட்டில் இந்நிதிக்கூற்றினை தயாரித்து நியாயமான முறையில் வழங்குவதற்கு காரணமாக உள்ளது. இதனால் கணக்காய்வாளரின் கணக்காய்வு முறைகள் பொறுத்தமாக அமைக்கப்படுவதுடன் இதனால் நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகளின் நற்பயன்களை குறித்து அபிப்பிராயம் தெறிவிக்கப்படாது.

கணக்காய்வுக்காக எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சாட்சிகள் எமது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை வழங்குவதற்குப் போதியதாகவும், பொருத்தமானவையாகவும் உள்ளன என்பதை நாம் நம்புகின்றோம்..

## அபிப்பிராயம்

எமது அபிப்பிராயத்தின் படி, நிதிக்கூற்றுக்கள் முக்கிய காரணிகளை அவதானித்து நியாயமாக வழங்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின், 2013 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கான நிதி நிலமை கூற்றையும் முடிவடைந்த ஆண்டிற்குள் கம்பனியின் நிதிச் செயல்திறன்களும், காசுப்பாய்ச்சல் விபரங்களும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ஏனைய சட்ட ரீதியானதும் மற்றும் நிர்வாக தேவைகள் தொடர்பான அறிக்கை

இந்நிதிக் கூற்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கத்தை உடைய கம்பனிச் சட்டத்தின் 151 (2) ஆம் அத்தியாயாத்துடன் பொருத்தப்பாடுடையதாக உள்ளது என்பதைக் கூறிக் கொள்கின்றோம்.

பட்டயக் கணக்காளர்
2013 மே மாதம் 30 ஆம் திகதி

Partners : E. Ruwan J. Perera ACA,ACMA,ACPM,MFE (Colombo) Joseph Jayaseelan BBMgt, ACA, ATTII (SL)
Consultant : Lal Nanayakkara BA (CEY), FCA

" An independent Firm, in association with Moore Stephens International Limited,
Members in Principal cities throughout the World"

AIYAR

# சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் விரிவான நிதிக் கூற்று

| 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கானது. | குறிப்பு | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | 20 | 287,152,154 | 339,050,649 |
| விற்பனைச் கிரயம் | | (174,262,628) | (215,317,782) |
| **மொத்த இலாபம்** | | 112,889,525 | 123,732,868 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானங்கள் மற்றும் கிடைப்பனவுகள் | 21 | 76,206,174 | 56,977,730 |
| நிர்வாகச் செலவுகள் | | (92,660,057) | (94,649,771) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | | (8,613,780) | (12,315,133) |
| தொழிற்பாடுகள் மூலம் உழைக்கப்பட்ட இலாபம் | | 87,821,863 | 73,745,695 |
| நிதி வருமானம் | | 21,167,854 | 37,463,655 |
| நிதிச் செலவு | 22 | (27,169,196) | (24,984,006) |
| **வரிக்கு முன் இலாபம்** | 23 | 81,820,521 | 86,225,344 |
| வரிச் செலவுகள் | 24 | (8,072,974) | (8,250,497) |
| **வருடத்துக்கான இலாபம்** | | 73,747,547 | 77,974,847 |
| **ஏனைய விரிவாக்கள் வருமானம்** | | (828,622.00) | - |
| **வருடத்துக்கான மொத்த விரிவாக்கள் வருமானங்கள் வரிகளின் பின்** | | 72,918,925 | 77,974,847 |
| பங்கு ஒன்றுக்கான உழைப்பு (ரூபா) | 25 | 3.69 | 3.90 |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

06 முதல் 37 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**சிலாபம்**
2014 மே 30 ஆந் திகதி



# சிலாபம் பெருந்தோட்ட நிறுவனம் நிதி நிலமை பற்றிய அறிக்கை

| 2013 டிசம்பர் 31 ஆந் திகதி | குறிப்பு | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| JEDB/SLSPC தோட்டங்களின் காணிகளுக்கான குத்தகை உரிமை | 04 | 84,554,871 | 87,243,593 |
| (காணி மற்றும் குத்தகை பெறப்பட்ட உயிரியல் ஆதணங்களைத் தவிர) | 05 | 4,584,953 | 5,635,000 |
| JEDB/SLSPC தோட்ட குத்தகைக்குப் பெறப்பட்ட உயிரியல் ஆதணங்கள் | 06 | 40,919,718 | 44,357,591 |
| உயிரியல் ஆதணங்கள் (குத். பெறப்பட்ட உயிரியல் ஆதனங்கள் தவிர) | 07 | 470,345,817 | 369,375,094 |
| சொத்து தொழிற்சாலை மற்றும் உபகரணங்களின் இலவச உரிமை | 08 | 137,091,894 | 95,998,453 |
| | | 737,497,255 | 602,609,732 |
| நடைமுறைச் சொத்துககள் | | | |
| பொருட்பட்டியல்கள் | 09 | 71,397,657 | 82,605,641 |
| விற்பணைக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் | 10 | - | 4 |
| விற்பணை மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | 11 | 28,790,674 | 43,256,800 |
| அரசாங்க தொழில் முயற்சிகளுக்கான நிதி வசதிகள் | 12 | 119,757,808 | 119,757,808 |
| ஏனைய நடைமுறை சொத்துக்கள் | | 1,430,790 | 4,678,016 |
| குறகிய முதலீடுகள் | 13 | 128,995,973 | 199,377,169 |
| கையிருப்பாகவும் வங்கியிலும் உள்ள காசு | | 5,857,391 | 4,556,010 |
| | | 356,230,292 | 454,231,447 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,093,727,547** | **1,056,841,179** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | |
| குறிப்பிடப்பட்ட மூலதனம் | 14 | 200,000,010 | 200,000,010 |
| நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 625,541,816 | 587,622,891 |
| **மொத்த உரிமையாண்மை** | | 825,541,826 | 787,622,901 |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்களும் கழிக்கப்பட்ட வருமானங்களும்** | | | |
| கழிக்கப்பட்ட வரிப்பொறுப்புக்கள் | 15 | 42,524,772 | 32,669,159 |
| கழிக்கப்பட்ட மானியங்கள் மற்றும் உதவுத் தொகைகள் | 16 | 8,048,742 | 8,477,900 |
| ஓய்வுதியப் பயன் கடப்பாடுகள் | 17 | 58,780,004 | 52,645,432 |
| JEDB/SLSPC தோட்டங்களின் குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | 18 | 113,380,484 | 115,277,115 |
| | | 222,734,003 | 209,069,607 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறக்கூடியவைகள் | 19 | 45,559,744 | 54,477,057 |
| செலுத்தப்பட வேண்டிய வருமான வரி | | (2,004,657) | 3,847,930 |
| வருடத்திற்குள் செலுத்த வேண்டிய குத்தகை கடன்காரர்களுக்கான கொடுப்பனவு | | | - |
| JEDB/SLSPC தோட்டங்களின் குத்தகைக் கொடுப்பனவுப் பொறுப்புக்கள் | 18 | 1,896,631 | 1,823,684 |
| | | 45,451,718 | 60,148,671 |
| **மொத்த உரிமையாண்மையும் பொறுப்புக்களும்** | | **1,093,727,547** | **1,056,841,179** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.
45 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

**உறுதிப்படுத்துதல்**
2007 ஆம் ஆண்டின் 07ஆம் இல.கம். சட். ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக் கூற். தயாரிக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றேன்

.................................
ரொஹான் ரத்நாயக
**சிரேஷ்ட கணக்காளர்**

நிதி அறிக்கை தயாரித்தல், சமர்ப்பித்தல் என்பன பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
பணிப்பாளர் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டு கையொப்பங்கள் இடப்படுகின்றன.

பிரயங்கனி லியனகே
**நிறைவேற்று அதிகாரி**

AIYAR & CO. COLOMBO Chartered Accountants

...................................
கலாநிதி சுனில் ஜயசேகர
(தலைவர்)

# உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பான கூற்று

2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதியாண்டுக்கானது

| | கூறப்பட்ட மூலதனம் | நிறுத்தி வைத்த இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| 2012 ஜனவரி 01 ஆந் திகதியன்று மீதி | 200,000,010 | 584,648,044 | 784,648,054 |
| வருடத்துக்கான தேறிய இலாபம் | - | 77,974,847 | 77,974,847 |
| ஏனைய விரிவாக்கள் வருமானங்கள் | - | - | - |
| மொத்த விரிவாக்கள் வருமானங்கள் | - | 77,974,847 | 77,974,847 |
| பங்கிலாபச் செலுத்தல்கள் | - | (75,000,000) | (75,000,000) |
| 2012 டிசம்பர் 31 ஆந் திகதி | **200,000,010** | **587,622,891** | **787,622,901** |
| வருடத்துக்கான தேறிய இலாபம | | 73,747,547 | 73,747,547 |
| ஏனைய விரிவாக்கள் வருமானங்கள் | | (828,622) | (828,622) |
| மொத்த விரிவாக்கள் வருமானங்கள் | 200,000,010 | 660,541,816 | 860,541,826 |
| பங்கிலாபச் செலுத்தல்கள | | (35,000,000) | (35,000,000) |
| 2013 டிசம்பர் 31 ஆந் திகதி | **200,000,010** | **625,541,816** | **825,541,826** |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

45 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்
சிலாபம்
2014 மே 30 ஆந் திகதி



# 2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கானது

2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்துக்கானது

| | 2013 ரூபா | 2012 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் மூலம் உழைக்கப்பட்ட காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | 81,820,521 | 86,225,344 |
| **செம்மையாக்கங்கள்** | | |
| - தேய்வுகள் / பெறுமானத் தேய்வுகள் | 35,298,925 | 29,737,646 |
| - ஊழியர் இலாபப் பங்குகளுக்கான ஒதுக்கங்கள் | 5,386,761 | 4,659,781 |
| - மானியங்களுக்கான கழிப்பனவுகள் | (429,158) | (399,738) |
| - அரசாங்க குத்தகைக் கட்டணங்கள் | 27,169,196 | 24,984,006 |
| - முன்னைய ஆண்டு தோட்ட சீராக்கம் (பனிக்கொடை சீராக்கம்) | 863,379 | - |
| - நிதி வருமானம் | (21,167,854) | (37,463,655) |
| - விஷேட பயன் திட்டச் செலவுகள் | (11,756,041) | (5,035583) |
| - ஆதன விற்பனை, உபகரண கழிவகற்றல் மூலம் ஏற்பட்ட இலாபங்கள் | (15,795,773) | (9,984,481) |
| - பதிவழிக்கப்படட்ட ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 2,157,952 |
| - ஒதுக்கப்பட்ட சொத்துக்கள், இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | - | 263,196 |
| | 124,902,038 | 105,215,633 |
| **மாற்றங்கள்** | | |
| - கையிருப்புக்கள் (அதிகரிப்பு / குறைவடைதல்) | 11,207,984 | 11,689,618 |
| - பால் கால்நடைகள் | (4,739,500) | 203,000 |
| - வியாபார மற்றும் வேறு கிடைக்க வேண்டியவைகளின் (அதிகரிப்பு .குறைவு) | 6,774,194 | 4,406,261 |
| - ஏனைய நடைமுறை சொத்துக்கள் | 3,247,226 | 7,917,729 |
| - விதைக்காய் செயற்திட்டங்களுக்கான முற்பணம் | - | (27,203,347) |
| - வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | (2,871,833) | (2,030,626) |
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | 138,520,108 | 100,198,268 |
| - விஷேட பயன் திட்டக் கொடுப்பனவுகள் | (5,621,469) | (3,121,051) |
| - ஊழியர் இலாபப் பகுதிக்கான கொடுப்பனவுகள் | (4,672,272) | (7,576,006) |
| - நிதிக் கொடுப்பனவுகள் | (33,929,164) | (17,961,532) |
| - நிதி வருமானக் கிடைப்பனவுகள் | 28,859,786 | 30,123,342 |
| - வருமான வரிக் கொடுப்பனவுகள் | (5,852,587) | (8,362,878) |
| **செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்** | 117,304,402 | 93,300,144 |
| **முதலீட்டு செயற்பாடுகள் மூலமான காசுப்பாய்ச்சல்** | | |
| - ஆதனம் மற்றும் உபகரணம் சேர்ப்பதன் மூலம் | (63,775,030) | (8,087,807) |
| - துறைசார் அபிவிருத்திச் செலவு | (102,320,954) | (64,399,924) |
| - ஆதனம் மற்றும் உபகரண விற்பனை மூலமான காசு | 16,535,450 | 10,119,184 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | (149,560,533) | (62,368,547) |
| **நிதிச் செயற்பாடுகள் மூலமான தேறிய காசுப்பாய்ச்சல்** | | |
| - பங்கிலாப செலுத்தல்கள் | (35,000,000) | (75,000,000) |
| - அரசாங்க குத்தகைக்கான மூலதன மீளச்செலுத்தல்கள் | (1,823,684) | (1,753,542) |
| **நிதிச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட தேறிய காசுப்பாய்ச்சல்** | (36,823,684) | (76,753,542) |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகளில் ஏற்பட்ட தேறிய (அதிகரிப்பு / குறைவு) | (69,079,815) | (45,821,945) |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமனானவைகளின் பெறுமதி (குறிப்பு அ)** | 203,933,178 | 249,755,123 |
| **வருட ஆரம்பத்தில் காசு மற்றும் அதற்குச் சமனானவைகளின் பெறுமதி (குறிப்பு ஆ)** | 134,853,363 | 203,933,178 |
| **(குறிப்பு அ)** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் வருட ஆரம்பத்தில் | | |
| குறுகிய கால முதலீடு | 199,377,169 | 244,813,796 |
| காசு மற்றும் வங்கி மீதி | 4,556,010 | 4,941,327 |
| | 203,933,178 | 249,755,123 |
| **(குறிப்பு ஆ)** | | |
| காசு மற்றும் அதற்குச் சமனானவைகள் வருட ஆரம்பத்தில் | | |
| குறுகிய கால முதலீடு | 128,995,973 | 199,377,169 |
| காசு மற்றும் வங்கி மீதி | 5,857,391 | 4,556,010 |
| | 134,853,363 | 203,933,178 |

கழிக்கப்பட வேண்டியவைகள் அடைப்புக்குறிகளுக்குள் காட்டப்பட்டுள்ளன.

45 முதல் 66 வரையான பக்கங்களில் உள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டுக் குறிப்புகள் என்பன நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

1 நிறுவனம் தொடர்பான தகவல்கள்

1.1 அறிக்கைப்படுத்தும் நிறுவனம்

1.1.1 உருவாக்கமும் சட்ட ரீதியான கட்டமைப்பும்

சிலாபம் பெருந்தோட்டக் கம்பனி 1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனத்தாபனங்கள் அல்லது அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை பொதுக்கம்பனிகளாக்கும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க 1982 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வரையறுக்கப்பட்ட ஒரு கம்பனியாகும் கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் சிலாபம் புத்தளம் வீதியில் இல 165 இலும் கொழும்பு அலுவலகம் கொழும்பு 11, டியுக் வீதி, இல 01 CDA கட்டடம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. தோட்டங்கள் சிலாபம், குருநாகல், கம்பஹா ஆகிய பெருந்தோட்ட மாவட்டங்களிலும் அமைந்துள்ளன.

1.1.2 முக்கிய செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

தெங்குச் செய்கை, கொப்பரா உற்பத்தி, தேங்காய் மட்டை மற்றும் கொப்பரா விற்பனை என்பனவே இவ்வருடத்தில் கம்பனியால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய செயற்பாடுகளாகும்.

1.1.3 தாய் நிறுவனம் மற்றும் இறுதியான தாய் நிறுவனம்

கம்பனியின் தாய் நிறுவனம் இலங்கை அரசாங்கமாகும்

1.2 வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள திகதி

2013 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் நிதிக்கூற்றக்களை வெளிப்படுத்துவதற்கு 2014 மே மாதம் 30 ஆந் திகதி இடம் பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

02. தயாரிப்பதற்கான அடிப்படை

## 2.1 இணக்கப்பாட்டுக் கூற்று

இந்த நிதிக் கூற்றானது இலங்கை கணக்கீட்டு தர நியமங்கள் தொடர்பான 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயர் கணக்காளர் நிறுவனத்தினால் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள (SLFRS / LKAS) மற்றும் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது.

## 2.2 அளவீட்டுக்கான அடிப்படை

இந் நிதிக்கூற்றுக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த (JEDB/SLSPC) தோட்டங்களின் ஆதன குத்தகை தவிர்ந்த செலவுச் சமவாயத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அவை நிதிக் கூற்றுக்களுக்கான 05,06,07ஆம் குறிப்புக்களில் அவற்றின் மீள் பெறுமதியிடல் தொடர்பாக விபரிக்கப்பட்டுள்ளது. பொருத்தமான இடங்களில் விஷேடமான கொள்கைகள் தொடர்ந்து வரும்குறிப்புக்களில் விளக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுக்களில் உள்ள பணவீக்கக் காரணிகள் தொடர்பில் எந்த ஒரு செம்மையாக்கமும் மேற்கொள்ளப்பட வில்லை.

## 2.3 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பிப்பு நாணயம்

நிதிக் கூற்றுக்கள் கம்பனி பயன்படுத்தும் இலங்கையில் பயன்பாட்டிலுள்ள ரூபாய்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன. ஒவ்வொரு நிதித் தகவலும் இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ள பெறுமானங்களுக்கு மிகக் கிட்டிய பெறுமானத்துக்குக் மாற்றப்பட்டுள்ளன.

## 2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்பாடு

கம்பனியின் நிதிக்கூற்றுக்களை (SLFRS / LKAS) தரப்படுத்தலுக்கு இணங்க தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கைகளுக்கு உதவியாக அமையும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மதிப்பீடுகளும், அனுமானங்களும் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் வருமானம் மற்றும் செலவுத் தொகை என்பன முகாமைத்துவத்திற்கு அவசியமாகின்றன. தீர்மானங்கள் மற்றும் மதிப்பீடுகள் வரலாற்று அநுபவங்கள் உருவாகும் சூழ்நிலைகள் என்பவற்றின் கீழ் நியாயமானது எனக் கருதப்படும் எதிர்ப்பார்ப்புக்கள் மற்றும் வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமைவதனால் உண்மையான அநுபவங்கள் இந்த அனுமானங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் மாற்றமானதாக அமைய முடியும்.
மதிப்பீடுகளும் அவற்றுடன் தொடர்புடைய எடுகோள்களும் தொடர்ச்சியான ஒரு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் அக்காலத்துக்கு மாத்திரம் உரியவையாக இருப்பின் அல்லது ஏதேனும் ஒரு காலத்தில் தாக்கம் செலுத்தக் கூடியதாக இருப்பின் மதிப்பீடுகள் திருத்தப்பட வேண்டிய காலங்களில் அவை அடையாளம் காணப்படும்.

## 2.5 தொடர்ச்சியான தன்மை

தூரநோக்குடன் தொடர்ச்சியான தொழில் முயற்சியொன்றாக வரையறுக்கப்பட்ட சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியை கொண்டு நடாத்த முடியும் என்பது பணிப்பாளர்களின் மதிப்பீடாகும். அதன் வியாபாரச் செயற்பாடுகளை இடைநிறுத்துவது பொருத்தமானதல்ல என அவர்கள் கருதுகின்றனர். ஆதனால் நிதிக்கூற்றுக்கள் அதற்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

## 2.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

கம்பனியானது கணக்கீட்டுக் கொள்கைகளைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வந்துள்ளதுடன் கடந்த வருடத்தில் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் போது மிகவும் தெளிவானதும் பொருத்தமானதுமான நிதிக் கூற்றுகளையும் பொருத்தமான முறையில் சமர்ப்பிக்கும் நோக்கில் முன்னைய வருடத்திற்கான தகவல்கள் தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டு அல்லது மீளத் தயாரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

## 2.7 நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கும் தினத்துக்குப் பிந்திய நிகழ்வுகள்

நிதி அறிக்கைகளை சமர்ப்பிக்கும் தினத்துக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்து முக்கியமான நிகழ்வுகள் நிதிக் கூற்றுக்களில் அல்லது உரிய செம்மையாக்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

03. விஷேட கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

## 3.1 சொத்துக்களையும் அவற்றின் பெறுமதியையும் மதிப்பிடுவதற்கான சுருக்கம்

நிதிக் கூற்றில் நடைமுறை சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்களாயின் காசு மற்றும் அறிக்கைபடுத்தும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது ஒரு வருடத்துக்கு குறைந்த காலத்தினுல் கம்பனியின் தொழிற்பாட்டு வட்டத்தினுல் காசு உழைக்கும் சொத்துக்கலாக இருக்கும். நடைமுறை அல்லாச் சொத்துக்கள் என்பது அறிக்கை சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு மேற்பட்ட காலம் கம்பனி தக்க வைத்திருக்க எதிர்பார்க்கும் சொத்துக்களைக் குறிக்கின்றது.

### 3.1.1 ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

### 3.1.1.1அடையாளம் காணுதலும் அளவிடுதலும்

ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் அவற்றின் செலவின் அடிப்படையில் (குத்தகை வெற்றுக் காணியின் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதிக்கு) திரண்ட பெறுமானத் தேய்வுக்கான கழிப்பனவை ஒதுக்குதல், ஏதேனும் சேத இழப்புக்கான திரண்ட கழிப்பனவு.

(அ) சொந்தமான ஆதனங்கள்

ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்கின்ற போது செய்யப்பட்ட நேரடியான செலவுகளாகும். சுயமான உற்பத்தி செய்யப்பட்ட ஒரு சொத்தாக இருப்பின் அப்பொருளை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தும் நிலைக்கு கொண்டுவருவதற்கு செய்யப்பட்ட மென்பொருட்கள் குறித்த உபகரணத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டின் ஒரு பகுதியாக கணக்கெடுக்கப்பட்டுள்ளன.

ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்களின் ஏதேனும் விஷேட பகுதியாயின் மாற்றங்கள் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒழுங்குமுறைப்படி அப்பாகங்கள் பயனுறுதிமிக்க ஆயட்காலத்தையும் கழிக்க முடியுமான தனியான அலகுகளாகவும் கருதப்படும். மேலும் பிரதான சோதனையொன்று நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பின் அதன் செலவு தொழிற்சாலையை அல்லது உபகரணத்தை கொண்டு நடாத்துவதாக கருதுவதன் மூலம் கணக்கிடப்படும். ஏனைய அனைத்து திருத்த வேலைகளும் பராமரிப்பு விரிவாக்கற் கூற்றுக்களின் செலவுகளாகக் காட்டப்பட்டுள்ளன. முடிவுறாத மூலதனம், அவற்றை முதலாவதாக பயன்படுத்தும் போது அல்லது சொத்துக்களைச் செயற்படுத்தும் சந்தர்ப்பங்களில் அதற்கான சொத்துக்களுக்கு மாற்றப்படும்.

(ஆ)குத்தகை சொத்துக்கள்

நிதிக்குத்தகையின் கீழ் பெறப்பட்ட ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்கள்
(குத்தகைக்கு பெறப்பட்ட சொத்துக்களை சொந்தமாக்கிக் கொள்வதன் மூலம் கம்பனிக்கு பாதிப்புக்கள் அல்லது பயன்பாடுகள் நேரடியாகக் கிடைக்குமாயின்) அவற்றின் நியாயமான பெறுமதியையும் ஆகக் குறைந்த தற்போதைய பெறுமதியிலும் குறைந்த பெறுமதியின் அடிப்படையில் மூலதனமாக்கிய கம்பனியினால் அச்சொத்துக்களை பயன்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கும் காலப்பகுதி முழுவதிலும் பெறுமானத் தேய்வாக கழிக்கப்பட்டிருக்கும்.

குத்தகைக்காரருக்குச் செலுத்த வேண்டிய மூலதனப் பெறுமதிக்குச் சமமான தொகை பொறுப்பாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிதி வருடத்திலும் செலுத்தப்படும் குத்தகைப்பணத்தில் அடங்கும் வட்டியின் அளவு அவ்வருடத்திற்கான செலவாக விரிவாக்கள் வருமானத்தில் செலவாகப் பதியப்படும். இதன் மூலம் ஒரே வீதத்தின் கீழ் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் காணப்படும் குத்தகைப் பொறுப்புக்கான வட்டி கணக்கிடப்படும்.

குத்தகை ஆதனங்களுக்கான மேம்பாட்டு வேலைகளுக்காகச் செயற்படும் செலவுகள் மூலதனமாக்கப்பட்டு எஞ்சிய குத்தகைக் காலம் அல்லது மதிப்பிடப்பட்ட பயனுறுதிமிக்க ஆயுட் காலம் ஆகிய இரண்டில் குறைந்த காலப்பகுதியினுல் கழிக்கப்படும்.

### 3.1.1.2பிந்திய செலவுகள்

ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணம் ஒன்றின் பாகங்களை மாற்றீடு செய்யும் போது செய்யப்படும் செலவீனம் அப்பாகத்தை பராமரிப்பதற்கு செலவாகும் அளவு, அப்பாகத்தின் மூலம் எதிர்காலத்தில் பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு கிடைக்கும் என்றும் அதனை உறுதியாக அளவிட முடியுமாயின் அதனை ஒரு ஆதனமாக அடையாளம் காண முடியும். கொண்டு நடாத்தப்படும் மாற்றீடு செய்யப்பட்ட பாகங்கள் கீழே தரப்பட்டுள்ள கொள்கைக்கு இணங்க அடையாளம் காண முடியாததாக கருதப்படும். ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்களை நாளாந்தம் மேற்கொள்ளும் பராமரிப்பு வருடத்துக்கான இலாபமாக அல்லது நட்டமாக கருதப்படும்.

### 3.1.1.3சொத்தாக அடையாளம் காணப்படாமை

ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணங்களின் ஏதேனும் ஒரு பாகத்தை அகற்றும் போது அல்லது ஒரு பாகத்தின் மூலம் எதிர்காலப் பொருளாதாரப் பயன்கள் இல்லை என நினைக்கும் சந்தர்ப்பங்களில் அது ஒரு சொத்தாகக் கருதப்படமாட்டாது. அடையாளம் காணப்படாததன் காரணமாக கிடைக்கும் கிடைப்பனவுகளும் நட்டங்களும் இலாபங்களாக அல்லது நட்டமாக கருதப்படும் அதேவேலை அதன் பயன்கள் வரவாக வகைப்படுத்தப்பட மாட்டாது.

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

### 3.1.1.4 கழிப்பனவுகள் மற்றும் பெறுமானத் தேய்வுகள்

(அ) விரிவான வருமானக் கூற்றுக்களில் ஆதனங்கள், தொழிற்சாலை மற்றும் உபகரணச் செலவு அல்லது மதிப்பீட்டுப் பெறுமதி மதிப்பீட்டுக் காலம் முழுவதிலும் நியாயமான அடிப்படையில் பிரிக்கும் நோக்கில் பின்வரும் முறையில் கழிப்பனவுகள் கணக்கிடப்படும்

| | வருடங்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| கட்டடங்கள் | 40 | 2.50 |
| தொ.சாலை உபகரணம் | 15 | 6.67 |
| தளபாடம் , பொறுத்தும் | 10 | 10.00 |
| மோட்டார் வாகனங்கள் | 05 | 20.00 |
| உபகரணங்கள் | 08 | 12.50 |
| நிலையான காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| வேலி அமைத்தல் | 03 | 33.33 |
| நீர் வழங்கள் | 20 | 5.00 |

ஏதேனும் ஒரு சொத்தின் கழிப்பனவானது அப்பொருளின் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அச்சொத்தை விற்பனைக்காக எடுக்கும் திகதி வரையான அல்லது சொத்தாக அடையாளம் காணாதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதியாகும்.

(அ) பெறுமானத் தேய்வு

பெறுமானத் தேய்வுக் காலத்தின் இறுதியில் கம்பனி உண்மையாகவே சொத்தின் உரிமையாளராகிவிடுகின்றது, என அறிந்தாலேயன்றி குத்தகையின் கீழ் உள்ள சொத்துக்களை குத்தகைக் காலம் அல்லது பயனுறுதியான ஆயுட்காலம் ஆகிய இரண்டில் குறுகிய காலத்தினுள் சமமான அளவுகளில் பின்வரும் முறையில் கழிக்கப்படும்

| | வருடங்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| வெற்றுக் காணி குத்தகை உரிமை | 53 | 1.89 |
| காணி அபிவிருத்தி | 30 | 3.33 |
| சுவீகரிக்கப்பட்ட ஏனையவைகள் | 30 | 3.33 |
| கட்டடங்கள் | 25 | 4.00 |
| இயந்திரங்கள் | 15 | 6.67 |
| நீர் வழங்கள் | 20 | 5.00 |

### 3.1.2 உயிரினச் சொத்துக்கள்

### 3.1.2.1 முதிர்வுற்ற மற்றும் முதிர்வுராத பெருந்தோட்டம்

(அ) அசையா உயிரினச் குத்தகை சொத்துக்கள் (முதிர்வுற்ற மற்றும் முதிர்வுராத பெருந்தோட்டம்)

இலங்கை பட்டயர் கணக்காளர்கள் நிறுவனத்தினால் பயிர் நிலங்கள் தனியார் மயமாக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் UITF கட்டளைக்கு அமைவாக ஜனவசம / இலங்கை பெருந்தோட்ட சபைக்கு சொந்தமான குத்தகை உயிரியல் சொத்துக்கள் (முதிர்வுற்ற மற்றும் முதிர்வுராத பெருந்தோட்டங்கள்) 1992 ஆம் ஆண்டு ஜுன் 22 ஆந் திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் சபையின் ஏடுகளில் பதியப்பட்டன.

குத்தகை உரிமை பெற்ற உயிரினச் சொத்துக்கள் தொடர்பாக விரிவான கணக்கறிக்கையினுள் நிகழ்காலம் பற்றியும் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்தி திறன் மிக்க ஆயுட்காலம் முழுவது பற்றியும் ஒப்பீட்டு ரீதியில் நேர் வழிமுறை அடிப்படையில் பின்வருமாறு அறவீடு செய்யப்படவுள்ளது.

| | வருடங்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| முதிர்வுற்ற பெருந்தோட்டம் | 30 | 3.33 |

(ஆ) குத்தகை சொத்துக்கள் அபிவிருத்தி (முதிர்வுற்ற மற்றும் முதிர்வுராத பெருந்தோட்டம்)

பயிர்ச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளும் காலப்பிரிவில் அதாவது நிலத்தை செப்பனிடல், மறுசீரமைத்தல், புதிய பயிர்ச்செய்கை நடவடிக்கை, மீள் பயிர்ச்செய்கை மற்றும் இடைநடுப் பயிர்ச்செய்கை மற்றும் புதிய பயிர்ச்செய்களுக்கு உரமிடல் தொடக்கம் அறுவடையை பெறும் வரையிலான (பயிர்கள் முதிர்வடையும் வரையில்) அனைத்து செலவுகளும் முதிராத பெருந்தோட்டங்களின் கீழ் மாற்றப்படும். அறுவடையை பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கும் வருடத்தில் முதிர்ந்த பெருந்தோட்டங்களின் கீழ் மாற்றப்படும். இத்தகைய முதிராத பெருந்தோட்டங்களின் செலவுகள் நேரடியாக ஆகுசெலவினாலும் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட பொதுப்பணிகளின் ஆகு செலவினாலும் அமையப் பெற்றுள்ளன.

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

குத்தகைக் காணிகள் அபிவிருத்தியின் மதிப்பிறக்க காலப்பகுதியாக, பரந்த அளவிலான நேர் வழிமுறைக்கு அமைவாக குத்தகை காலம் முடிவுறுவதற்குள்ள காலம் அல்லது அபிவிருத்தியின் பயன்தரு காலப்பகுதியில் எல்லைக்காலம் எனும் இரு காலப்பகுதியிலும் குறைந்த காலப்பகுதி இணங்கொள்ளப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தற்போதைய மற்றும் ஒப்பீட்டு ரீதியான உற்பத்தி திறன் மிக்க காலப்பகுதி பின்வருமாறு அமையும்.

| | வருடங்கள் | வீதம் (%) |
|---|---|---|
| தென்னை | 50 | 2.00 |
| மரமுந்திரிகை | 25 | 4.00 |
| ஏனையவை | 20 | 5.00 |

### 3.1.2.2கால்நடைகள்

கால்நடைகள் மதிப்பீடு செய்யப்படுவது அவற்றின் சாதாரண பெறுமதிகளிலிருந்து விற்பனை விலை கழிக்கப்பட்ட பின்னரேயாகும். தேசிய கால்நடைச் சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிறுபத்திற்கு அமைய கால்நடைகளின் சாதாரண மதிப்புகள் கணிக்கப்படும்.

### 3.1.3 விற்பனை செய்யவுள்ள அசையாச் சொத்துக்கள்

நீண்ட கால பாவனைக்கு அல்லாது விற்பனையை நோக்காகக் கொண்டுள்ள அசையாச் சொத்துக்கள் விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களாக வகையீடு செய்யப்பட்டுள்ளன. விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள கால்நடைகள் அவ்வாறு அவை விற்பனை செய்வதற்கு கிட்டிய காலப்பகுதியில் அவைகளின் கொள்ளளவு அல்லது அவற்றின் சாதாரண பெறுமதியிலிருந்து விற்பனை ஆகு செலவு கழிக்கப்பட்ட பின்னர் கிடைக்கப்படும் பெறுமதி என்ற இரு பெறுமதிகளிலும் குறைந்த அளவே கணிக்கப்படும். தற்போதைய நிலமையில் விற்பனை செய்வதற்கு கூடிய சந்தர்ப்பம் உள்ள அசையாச் சொத்துக்கள் விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என வகையீடு செய்யப்படுகின்றன.

“விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ளவை” என வகையீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள், இயந்திரங்கள் அல்லது உபகரணங்கள் மதிப்பிறக்கம் செய்யப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கோ உட்படமாட்டா.

### 3.1.4 கையிறுப்பு

கையிறுப்பு ஆகு செலவு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய பணமாக்கப்பட்ட பெறுமதி மீது உபயோகத்தில் இல்லாத மற்றும் மந்தமான விற்பனையாகும் பொருட்களுக்கு செய்யப்படும் தேவையான ஒதுக்கீடுகளின் பின்னர் பெறுமதியில் குறைந்த அளவு காட்டப்பட்டுள்ளது. தேறிய பணமாக்கப்பட்ட அளவு என்பது பணமாக்கப்பட்ட ஆகு செலவு ஒதுக்கீடு செய்யப்பட்ட / தற்போதுள்ள நிலமையில் விற்பனை செய்ய முடியுமான நிலைக்கு மாற்றி விற்பனை ஆகு செலவை தயாரித்து சாதாரண வியாபார முறைமையின் கீழ் கையிருப்புக்களை விற்பனை செய்ய முடியுமான விலைகளாகும்.

| | |
|---|---|
| **பாவனையும் மேலதிக பொருட்கள் உள்ளீடும்** | FIFO அடிப்படையில் உண்மையான ஆகு செலவு அளவிற்கு. |
| **பெறப்பட்ட அறுவடை** | உயிரியல் சொத்துக்களினால் பெறப்பட்ட விவசாய உற்பத்திகளை நியாயமான சந்தை விலைகலில் விற்பனை செய்வதற்கு குறைந்த செலவில் அறுவடை பெறப்பட்ட இடத்திலேயே பெறுமதி அளவீடு செய்யப்படும்.<br><br>பூரணமாக அல்லது பகுதியாக நிறைவு செய்யப்பட்ட விவசாய உற்பத்திகளை அவை மாற்றீடு செய்யப்படுவதற்கான ஆகு செலவை கூட்டுவதன் மூலம் பெறுமதி அளவீடு செய்யப்படும். |
| **கால்நடை வளம்** | கால்நடையின் பெறுமதி அளவீடு செய்யப்படுவது அவற்றின் சாதாரண மதிப்புக்களிலிருந்து விற்பனை விலை கழிக்கப்பட்ட பின்னரேயாகும். தேசிய கால்நடை சபையினால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிறுபத்திற்கு அமைய கால்நடைகளின் சாதாரண மதிப்புகள் கணிக்கப்படும் |

### 3.1.5 நிதிச் சொத்துக்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 39 (LKAS 39) இன் கீழ் வரக்கூடிய நிதிச் சொத்துக்கள் இலாபங்கள் அல்லது நட்டத்தின் மீதான சந்தைப் பெறுமதிகள் உள்ள நிதிச் சொத்தக்களின் கடன்கல் அல்லது கிடைக்க வேண்டியவைகள் அல்லது காலம் பூர்த்தியாகும் வரை வைக்கப்பட்டுள்ள முதலீடுகள் அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளவைகள் நிதிச் சொத்துக்கள் எனப்படும்.

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

### 3.1.5.1 இலாப நட்டத்தினூடாக சாதாரண பெறுமதியுள்ள நிதிச்சொத்துக்கள்

விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் ஆரம்ப கட்டத்தில் இலாப நட்ட அடிப்படையில் இணம் காணப்பட்ட சொத்துக்கள் இதற்குள் அடங்கும். கொடுக்கல் வாங்கல்களுக்கு ஒதுக்கப்பட்டவையாக வகையீடு செய்யப்படுவது மிகக் கிட்டிய காலத்திற்குள் விற்பனை செய்யவிருக்கின்ற அல்லது கொள்வனவு செய்யவிருக்கின்ற சொத்துக்களாகும்.

நிதி நிலமை பற்றிய அறிக்கையில் இலாப நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியுள்ள நிதிச் சொத்துக்களும் விரிவான நிதி அறிக்கையில் நிதிச்செலவுகள் மற்றும் நிதி இலாபங்கள் வகையீடு செய்யப்பட்டுள்ளன.
சபையின் இலாப நட்டத்தின் அடிப்படையிலோ அல்லது சந்தைப் பெறுமதி அடிப்படையிலோ எதுவும் நிதிச் சொத்தாக பெயரிடப்படுவதில்லை

### 3.1.5.2 கடன்களும் கிடைக்க வேண்டியவைகளும்

கடன்களும் கிடைக்க வேண்டியவைகளும் நிறந்தர அல்லது தவணைக்கட்டணங்களின் அடிப்படையிலான சொத்துக்களாகவே கணிக்கப்படும். நடப்பு சந்தை விலையினூடாக விலைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இது நிதிச் சொத்துக்களின் ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர் அவற்றை பெறும் போது அல்லது கையளிக்கும் போது நியாயமான பெறமதிக்கு கொடுக்கல் வாங்கல்லின் செலவு இணங்காணப்படுவதோடு சாதகமான வட்டி வீதங்கள் அடிப்படையில் ஆகுசெலவை மீளப்பெறுவதினூடாகவும் மதிப்பீடு செய்யப்படும்.

இங்கு பெறுமதியில் நிலையான குறைவு ஏற்பட்டிருப்பின் அதனைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இங்கு பெறுமானத் தேய்வுச் செலவானது தள்ளுபடிகள், சுவீகரிக்கும் போது குறைந்து காணப்பட்ட அதிக விலை, கட்டணங்கள் அல்லது வேறு ஏதேனும் செலவுகள் இருப்பின் அவற்றை எளிய வட்டி வீத முறையின் கீழ் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதி கணக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.
எளிய வட்டி வீதத்தின் கீழ் பெறுமானத் தேய்வின் அளவு நிதி வருமானத்தின் கீழ் விரிவாக்கல் வருமானக் கூற்றினுள் அடையாளம் காணப்பட்டது. பெறுமதியின் நிலையான குறைவு விரிவாக்கல் வருமானக் கூற்றின் நிதிச் செலவுகளின் கீழ் இனங்காணப்பட்டுள்ளன. தொடர்புடைய தரப்பினரிடமிருந்து கிடைக்க வேண்டியவைகள், வைப்புக்கல், முற்பணங்கள் மற்றும் வேறு கிடைக்க வேண்டியவை என்பனவும் காசு மற்றும் காசுக்கு சமனானவைகள், கடன்களாகவும் கிடைக்க வேண்டியவையாகவும் கருதப்படும்.

### வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்

வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள் என்பது பின்வரும் சந்தர்ப்பங்களில் தவிர அதன் நியாயமான பெறுமதியின் அடிப்படையில் முதலில் அடையாளம் காணப்பட்ட பின்னர் பெறுமானத் தேய்வு கழிக்கப்படும் செலவைக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவைகளைக் குறிக்கும்.

- தொடர்புடைய தரப்பினருக்கு மீண்டும் செலுத்தும் முறையன்றி வழங்கப்படும் வட்டியற்ற கடன்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகளின் அடிப்படையில் அறவிட முடியாத மற்றும் கடன்களுக்கான ஏற்பாடுகளின் கீழ் வியாபார கிடைக்க வேண்டியவைகள் இருப்பின்,
- வெளிப்படுத்தப்பட்ட வட்டி அடிப்படையைக் கொண்டிராததும் தள்ளுபடித் தாக்கமின்றியதுமான குறுங்காலத்தில் கிடைக்க வேண்டியவை உண்மைப் பெறுமதியில் அறவிட முடியாத அல்லது சந்தேகத்திற்கிடமான ஏற்பாடுகளின் கீழ் வியாபார ரீதியாகக் கிடைக்க வேண்டியவைகள் இருப்பின்,

காசு மற்றும் அதற்கு சமானனவை
காசுப் பாய்ச்சல் கூற்றில் கையிருப்பிலுள்ள மற்றும் வங்கியிலுள்ள காசு, நிலையான மற்றும் சேமிப்பு வைப்பு என்பன காசு மற்றும் அதற்குச் சமானனவை என்பதில் அடங்கும்.

### 3.1.5.3 முதிர்வடைந்க முதலீடுகள்

நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள் அல்லது நிலையான முதிர்வுகளுடனான நிதிச் சொத்துக்கள் வழி மூலமல்லாதவைகளை கம்பனி முதிர்வுகளாக வைத்திருப்பதற்கான எண்ணத்தினை கம்பனி கொண்டுள்ள போது அவை முதிர்வடைந்தவைகளாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பினன்னர் முதிர்வடைந்த முதலீடுகள் வினைத்திறனான வட்டி முறைமைகளை பயன்படுத்துவதன் மூலம் குறைந்த அழிவுடன் தீர்ப்பனவு செய்யப்பட்ட செலவாக அளவீடு செய்யப்படும். நிதிக்கூற்றில் நிதி வருமானத்தில் தீர்ப்பனவு உள்ளடக்கப்பட்டுள்ளது. அழிவுகளிலிருந்து உருவாகும் இழப்புக்கள் நிதிச் செலவுகளின் முழுமையான வருமானக்கூற்றில் இணங்காணப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் கம்பனியிடம் முதிர்வடைந்க முதலீடுகள் இருக்கவில்லை. 2012 (2011 - Nil).

### 3.1.5.4 கிடைக்க கூடிய விற்பனை நிதி முதலீடுகள்

கிடைக்க கூடிய விற்பனை நிதிச் சொத்துக்கள் நிதிச் சொத்துக்கள் வழி மூலமானவையல்ல. அவை கிடைக்க கூடிய விற்பனைகளாகவோ அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நிதிச் சொத்துக்களிலும் வகைப்படுத்தப்படாதவைகளாகவும் உள்ளன. ஆரம்ப இணங்காணலுக்குப் பின்னர் நியாயமான பெறுமதியிலும் அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய வகையிலும் அளவீடு செய்யப்பட்டன. அதைத் தவிர அழிவுகளினால் ஏற்பட்ட இழப்புக்கள் ஏனைய முழுமையான வருமானங்களில் இனங்காணப்பட்டுள்ளதோடு, பங்குரிமையில் நியாயமான பெறுமதி ஒதுக்கை பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்டுள்ளன. கிடைக்கக்

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

கூடிய விற்பனை பிணைகள் தொடர்பான வட்டி வருமானம் வினைத்திறனான வட்டி வீதத்தினைப் பயன்படுத்துவதன் மூலம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு, இலாபத்திலோ அல்லது நட்டத்திலோ அவை இணங்காணப்பட்டுள்ளன. முதலீடுகள் இணங்காணப்படாத போது, பங்குரிமையில் திரட்டப்பட்ட பெறுகைகள் அல்லது இழப்புக்கள் இலாபத்திற்கோ அல்லது நட்டத்திற்கோ மீண்டும் வகைப்படுத்தப்படும்.
2012 ஆம் ஆண்டின் கம்பனியிடம் முதிர்வடைந்த முதலீடுகள் இருக்கவில்லை. 2012 (2011 - Nil).

### 3.1.5.5 நிதி மற்றும் நிதி சார்ந்தவை

நிதிக் கொடுப்பனவுகளுக்காக இருக்கும் பணமும் வங்கியில் இருக்கும் பணம் நிலையான மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பன நிதி மற்றும் நிதி சார்ந்தவையாக குறிப்பிடப்படும்.

### 3.2 பொறுப்புக்களும் ஒதுக்கீடுகளும்

நிதி நிலை அறிக்கைகளை சமர்ப்பிக்கும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டிய அல்லது வேண்டப்படும் போது செலுத்தப்படும் பொறுப்புக்கள் கணக்குக் கூற்றில் ஒரு வருடத்திற்கு பின்னர் செலுத்தப்பட வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது அறியப்பட்டுள்ள அனைத்து பொறுப்புக்களும் கணக்கிலிடப்பட்டுள்ளன. கடந்தகால நிகழ்வுகளின் விளைவாக கம்பனிக்கு சாட்டப்பட்டுள்ள சட்டரீதியான மற்றும் ஆக்க பூர்வமான கடமைப்பாடுகளை இனங்கண்டு அவற்றை குறை நிரப்பு செய்வகற்காக நிதித் தேவைப்பாடுகளின் போது சட்டரீதியான கடமைப்பாடுகளுக்கு நிதி அறிக்கைகளில் தேவையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

### 3.2.1. நிதிப் பொறுப்புக்கள்

ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்

(LKAS 39) இன் படி நிதிப் பொறுப்புக்கள் இலாப நட்டத்தின் சாதாரண பெறுமதி, கடன் மற்றும் கடனுக்கு பெறல் அடிப்படைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் கம்பனி தனது நிதிப் பொறுப்புகளை இணங்கண்டு கொள்ளும். ஆரம்பத்தில் சாதாரண பெறுமதியின் அடிப்படையில் அறிந்து கொண்ட கடன் மற்றும் கடனாக்க பெறல் செலவு அவ்வப்போது செலுத்தப்படும். இங்கு கொடுக்கல் வாங்கலின் நேரடியான செலவுகள் உள்ளடங்கும்.

### 3.2.1.1. சாதாரண பெறுமதியின் படி நிதிப் பொறுப்புக்கள் அடிப்படையில் இலாப நட்டம்

சாதாரண பெறுமதியின் இலாப நட்ட அடிப்படையில் உள்ள நிதிப் பொறுப்புக்களுக்கு வர்த்தகத்துக்கான நிதிப் பொறுப்புக்களும் முதல் தடவையில் சந்தைப் பெறுமதியின் அடிப்படையில் இலாப நட்டப் படி நிதிப் பொறுப்புக்கள் உள்ளடங்கும். எதிர்வரும் காலங்களில் வியாபாரத்துக்காக வைத்துள்ள சொத்தக்கள் நிதிப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. வியாபாரத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் இலாப நட்டப் படி நிதிப் பொறுப்புக்கள் எதுவும் கம்பனியிடமில்லை.

### 3.2.1.2. கடன் மற்றும் கடன் பெறுகைகள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் வட்டி அடிப்படையிலான கடன், கடனுக்கு பின் வட்டி விகித அடிப்படையில் செலவுகள் செலுத்தப்பட்ட பின்னர் இலாபமும் நட்டமும் வருமான அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. ஏனைய நிதிப் பொறுப்புக்கள் வர்த்தக மற்றும் ஏனைய செலவீனங்கள்,செலுத்தப்பட வேண்டிய வருமான வரிகளுக்கு உட்படும்.

### 3.2.2. நிதி இடர் முகாமை நோக்கங்களும் கொள்கைகளும்

வர்த்தக மற்றும் இதர செலுத்துகைகளும் வருமான வரி செலுத்துகைகளும் கம்பனியின் அடிப்படை நிதிப்பொறுப்புக்களாகும். இந் நிதிப் பொறுப்புக்கள் கம்பனியினை செயற்படுத்திக கொண்டு செல்வதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகும். அரச முயற்சியான்மை, வர்த்தக மற்றும் இதர பெறுகைகள், நிதி மற்றும் குறுகிய கால வைப்புக்கள் மற்றும் நேரடியாக செயற்பாட்டின் மூலம் கிடைக்கும் வகையில் கம்பனி கடன் வழங்கியுள்ளது. எனவே கம்பனி நிதிச் சாதனங்களை பயன்படுத்தும்போது கடன் இடர்கள், பணப்புழக்க இடர்கள், நாணய இடர்கள் மற்றும் வட்டி விகித இடர்களுக்கு முகங்கொடுக்கும். இக்குறிப்பு கம்பனி முகங்கொடுக்கும் இவ்வாறான இடர்கள் பற்றிய தகவல்களை வழங்குவதுடன் அவை முகாமைத்துவதுக்கான கம்பனியின் நோக்கங்களினாலும் கொள்கைகளினாலும் விளக்கப்படுகின்றன.

### 3.2.2.1 கடன் இடர்

கடன் கொடுக்கப்பட்டுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது தொடர்புடைய ஒரு பிரிவினர தமது ஒப்பந்தத்தை, முரியை கடைப்பிடிக்க முடியாது செல்லும்போது கம்பனிக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்காமல் செல்வதால் ஏற்படும் நிதி நட்டமாகும்.

### 3.2.2.1. பணப்புழக்க இடர் / திரவத்தன்மை இடர்

தமது நிதிப் பொறுப்புக்களை நிதி அல்லது வேறு நிதி வருமானங்களால் நிரப்பு செய்யும் போது ஏற்படும் இயலாமை பணப்புழக்க இடர் எனப்படும்.
கம்பனி தமது பொறுப்புக்களை நிறைவேற்றும்போது கம்பனியின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மற்றும் வேறு

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

நட்டங்கள் ஏற்படாத வகையில் பொறுப்புக்களை நிறைவேற்றப் போதுமானளவுபணப்புழக்கத்தைப் பின்பற்றும்.

ஊழியர்களுக்கான பயன்கள்

(அ) தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு உதவு தொகைத்திட்டம் - சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் பின்னர் சேவை பங்களிப்பு திட்டமொன்றாக சேவை வழங்குனரால் ஊழியர்களுக்கு திட்டவட்டமான பங்களிப்பொன்றை வழங்குவதுடன் அதனை விடக் கூடுதலாகச் செலுத்த சட்டரீதியாகவோ ஆக்கபூர்வமாகவோ கடமைப்பாடில்லை. ஊழியர்களால் வழங்கப்படும் சேவைகளுக்காக சேமலாப நிதி மற்றும் மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு எல்லா ஊழியர்களுக்கும் செலுத்தும் தொகைசெலவொன்றாக வரவு செலவு அறிக்கையில் கணக்கிடப்படும்.

ஊழியர்களின் திரட்டிய சம்பளத்தில் 12மூ மற்றும் 3மூ களை முறையே சேமலாப நிதி மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு மாதாந்தம் செலுத்தும்.

(ஆ) தீர்மானிக்கப்பட்ட உதவு தொகைத் திட்டம்

தீர்மானிக்கப்பட்ட உதவு தொகைத் திட்டம், தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தை ஒத்த சேவைக்குப் பிற்பட்ட உதவுதொகைத் திட்டமொன்றாகும். தீர்மானிக்கப்பட்ட உதவு தொகைச் செலவைக் கணிப்பிடும் போது உச்ச பெறுமதியிடல் அடிப்படை பயன்படுத்தப்படும். உச்ச பெறுமதியிடல் கணிப்பிடும் போது கழிவு விகிதம், எதிர்கால சம்பள அதிகரிப்பு மற்றும் ஊழியர் புரழ்வு என்பன கருத்திற்கொள்ளப்படும். பயன்படுத்திய கருதுகோள்கள் பற்றிய விபரங்கள் 16 ஆம் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை வங்கியின் நிரந்தர வைப்பு மூலம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3.3 காலம் கடந்த வருமானம வழங்கல்களும் மானியங்களும்

கட்டாயமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கும் அரச வழங்கல்கள் ஏற்புடைய நிபந்தனைகளுக்கு உற்படுவதாகும். வழங்கல்கள் செலவாகக் கருதும்போது , அதனால் நிரப்புவதற்கு எதிர்பார்க்கப்படும் நோக்கம் முறையானஅடிப்படையில் கிடைக்கும் வருமாமொன்றாகக் கருதப்படும். அவ் வழங்கல்கள் சொத்தொன்றாயின் அது சொத்தின் ஆயுட் காலத்துள் சம அளவு காலம் கடந்த வருமானமாக ஒதுக்கப்படும். வழங்கல்கள் சொத்து, வேலைத் தளம் மற்றும் உபகரணங்களுக்காயின் அவ் வழங்கல் சொத்து,வேலைத் தளம் மற்றும் உபகரணங்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் காலம் கடந்த வருமானமாக ஒதுக்கப்படும். சொத்துக்கள் அதன் பயனுள்ள ஆயுட்காலம் அல்லது நிரப்ப வேண்டிய குத்தகை காலம் ஆகிய இரண்டில் குறைந்ததற்கு மீள் செலுத்தப்படும்.

| | |
|---|---|
| கட்டடம் | 40 வருடங்கள் |
| நீர் விநியோகம் | 20 வருடங்கள் |
| மோட்டார் வாகனம் | 05 வருடங்கள் |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 10 வருடங்கள் |
| உபகரணங்கள் | 08 வருடங்கள் |

## 3.4 வருமானங்களும் செலவுகளும்

வருமான அறிக்கையிடலின் காரணமாக கம்பனியின் செயற்பாடுகள் ஆக்கபூர்வமாக முன்வைக்கப்படுவதால் செலவுச் செயன்முறை பயன்படுத்தப்படுகின்றது.

### 3.4.1 வருவாய்

கம்பனிக்கு கிடைக்கும் பொருளாதார இலாபங்களால் வருவாய்களை இனங்கண்டுகொள்ள முடிவதுடன் எப்போது செலுத்த வேண்டும் என்பது பிரச்சினையில்லாமல் கணித்துக்கொள்ள முடியுமாக இருத்தல் வேண்டும். கிடைத்த மற்றும் கிடைக்கவிருக்கும் குறிப்பிட்ட பொதுவான பெறுமதி, அதற்காக ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் வருவாய் கணிப்பிடப்படும்.

அ) குறிப்பிட்ட பொருளின் உரிமை மற்றும் அண்மையில் வைத்திருப்பதால் கிடைக்கும் பயன்களுடன் அபாயப் பொருட்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம் வாங்குபவருக்கு மாற்றுதல், பொருட்கள் விற்பனையிலான வருவாய் என குறிக்கப்படும். விலைப்பட்டியல் மதிப்பில் தரகு, விற்பனைச் செலவு மற்றும் ஏனைய கட்டணங்களைக் குறைப்பதன் மூலம் வருவாய் அறிக்கையிடப்படும்.

ஆ) தேறிய விற்பனை பெறுமதி மற்றும் நடைமுறைச் சொத்துக்கள், வேலைத் தளம் மற்றும் உபகரணங்களை ஒப்பிடுவதன் மூலம் சொத்து, வேலைத் தளம் மற்றும் உபகரணங்களின் அகற்றலால் கிடைக்கும் அனுகூலங்கள் மற்றும் பிரதி கூலங்கள் கணிக்கப்படும். ஏனைய செயற்பாட்டு வருமானங்களின் கீழ் வருமான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இ) வட்டி வருமானம் LKAS 39 பயனுள்ள வட்டி முறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்...

ஈ) ஏனைய வருமானங்கள் உண்மை அடிப்படையில் குறிப்பிடப்படும்.

### 3.4.2 செலவுகள்

